உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-௩.] குரோதி ௵ மாசி௴ [பகுதி-௪.

கம்பர்.

(௱௭-ம் பக்கத்தொடர்ச்சி.)

இவர் பிரதாபருத்திரனிடம்போய்ச்சிறந்துவந்தது.

கம்பர் தம்மகனையும் மகளையும் இழந்ததுயரம் ஆற்றாதவராய்ச் சோழனையும் சோணாட்டையும் வெறுத்து அக்காலத்துச் சோழனினும் அமைச்சு நாடு அரண் பொருள் படை நட்பு என்னும் அங்கங்களால் பெரிதும் மேம்பட்டு விளங்கிய *ஓரங்கல் நாட்டுப் பிரதாபருத்திரன் என்னும் வேந்தனிடம் செல்லற்குநினைந்து நென்மலி (நெல்வேலி எனவுஞ்சொல்லுவர்) என்னும் ஊர்க்குப்போய் அங்குள்ள தச்சனொருவனைப்பாட அவன் ஆயிரக்கலநெல்லுக் கொடுக்கப்பெற்று அதனைத்தம் குடும்பசீவனத்திற்கு இட்டுவைத்துத் தாம் தொண்டைநாடு போயினர். இவர் சோழனைக் கோபித்தபோதே இவர் அவன்பாலெய்திய பேருரிமையெல்லாம் இழந்து வறியராய்ப்போயினராவர். இவர் தொண்டைநாடு போம்போது ஒரு வேளாளன் களத்திற் குறுணிநெல் வாங்கி அதனை வேலிக்காலிலிறைத்துப் பாடினர் என அறியப்படுதலானும் இவர் வறுமை யுணரப்படும். இவர் தொண்டைநாட்டுள்ள ஓர் ஏழைமனைக்கட் புக்கபோது அவன் நல்லுணவில்லாமல் மாவையே நீரிற்கரைத்து அதனை இவர் திருமுன்பு வைத்து இவரை நோக்கி யானும் என்னுரிமையும் நுமக்கேயடிமை யென்றுகூறி அதனை யமுதுசெய்தருளுமாறு வேண்ட அச்சில்லுணவை அவனதன்புடைமைக்கு மகிழ்ந்து பருகிப்போய் அந்நாட்டுள்ள சான்றோர் பிறரைப்பாடி அவர்களாற் பசுநிரையும் எருமைக்கூட்டமும்

---

* ஓரங்கல். ஐதராபாத்துக்கு வடகிழக்கேயுள்ளது. காகதீயர் கணபதிகள் எனப்பட்ட ஆந்திரராஜாக்களுடைய தலைநகராகச்சிறந்தது.

ஆடையாபரணங்களும் பிறவரிசைகளும் அளிக்கப்பெற்று ஆங்குப் பல வூரார்களைத் தமக்கடியராக்கி வாழ்ந்திருந்தனர். சின்னாட்கழித் தபின் அந்நாட்டுநின்று மிக்க சிறப்புடன் புறப்பட்டு நெடுந்தூரங் கடந்துசென்று ஓரங்கல் புக்கு ஆண்டுள்ள அருங்கலை விநோதனான பிரதாபருத்திரனது அறிவுடைப் பேரவைக்கணெய்தித் தமது கடலிற்பெரிய கல்விமாட்சியால் அவ்வேந்தனையும் அவனது நல்லவையையும் தம் வயப்படுத்தி அவ்வரசனால் நன்றுபோற்றப்பட்டு இனிதொழுகுவாராயினர். இவர் அவ்வேந்தன்பால் நாளும் தம்மிராமாவதாரத்துள்ள அலங்கார நயங்களை அமிழ்தெனப்பொழிந்து அவனைத் தமது பெரிய கல்விவலையிற் பிணித்துக்கொண்டு தமக்குச்சோழனாலியற்றப்பட்ட கொடுந்துன்பமெல்லாம் எடுத்தோதி அவ்வேந்தற்குச் சோழன்பாற் பெருஞ்சினமூளச்செய்து தமதளவில்பேராற்றலைச் சோழனுணருமாறு அவ்வுருத்திரனைத் தமக்கடைப்பை கட்டிக்கொண்டு தம்முடன் சோணாடுபோத வேண்டினர். இங்ஙனம் சோழனிற் பெரியனாகிய வேந்தனொருவனை இவர் தமக் கடைப்பை கட்டிவரவேண்டியதற்குக் காரணமாக வேறோர் கதை கூறுதலுமுண்டு. ஒருநாட் சோழன் கம்பருடன் தன்றிருமனையி னுயர்நிலையிற் சென்றுதன் பெருநகரையும் அதனைச்சூழ்ந்த பெருநாட்டையுங்கண்டு மகிழ்ந்து கம்பரைநோக்கி இவையெல்லாம்எமக்கடங்கியனவே யென்றுதருக்கினானுக்குக்கம்பர் இவையெல்லாம் நுமக்கடங்கியனவேயாம்;இவ்வாறு சிறந்த நீவிர் எனக்கடங்கினீர் என்று சோழனது அரசவலியினும் தமது கல்வி வலியையே மேம்படுத்தேத்திநின்றார். இது கேட்டுப் பொறாது சோழன் கம்பரை முனிந்தனனெனவும் அதுகண்டு கம்பர் அரசவலியினும் கல்விவலி சிறந்ததாதலை நுமக்குணர்த்துவல் என்று சோழற்குரைத்து அவனினுஞ்சிறந்த வேந்தனிடம்போய் அவனைத் தம் வயப்படுத்தி அவனை அடைப்பைகட்டிவர வேண்டினரெனவும் கூறுவர். பிரதாபருத்திரன் கம்பரது கல்வித்திறத்திற்கு அடிமைப்பட்டவனாகி அவர் வேண்டியவாறே புரிதற்குடன்பட்டு அவருக்கு முடியுடையரசருக் கொத்த பெரிய வரிசையெல்லாஞ் செய்து பலருங்காணத் தானும் அவருக்கடைப்பைகட்டிக்கொண்டுபோந்து அவரைச் சோணாட்டே முன்னரினும் சிறக்கவீற்றிருக்க வைத்துத் தன்னூர்க்கு மீண்டனன். இவற்றுக்கு மேற்கோள்:—

நெற்பயிர் விளைகழனி நென்மலி வாழ்தச்சன்
கற்படு திண்டோளன் கங்கண கணகணவன்
விற்புரை திருநுதலாண் மின்மினு மினுமினுவை*
சொற்படி வேலே செய்வா டெந்துமி திருதிருவை.†

இதுவும் ஒருபாட்டு. இதுக்குத்தியாகம் ஆயிரக்கல் நெல்லு.

(தமிழ்நாவலர் சரிதை.)

நிச்ச முறவே நெற்பயிராய் நீளுந் தமிழ்க்கு நென்மலிவாழ்
தச்சன் பொலியா யிரக்கலநெற் றந்தா னுலகிற் ருதாவாய்
மெச்சு மவன தாண்மையினல் வென்றே கொடியின் விருதுகட்டி
வைச்ச கொடையின் றரமெளிதோ வளஞ்சேர் சோழ மண்டலமே.

(சோழமண்டலசதகம்)

கம்பர் ஒரு வேளாளன் களத்திற் குறுணிநெல் வாங்கி வேலிக் காலிலிறைத்துப் பாடிய வெண்பா.

செட்டிமக்கள் வாயில்வழிச் செல்லோமே செக்காரப்
பொட்டிமக்கள் வாயில்வழிப் போகோமே—யிட்டமிலாப்
பார்ப்பா ரகரத்தைப் பாடோம் பரிசறிந்து
காப்பா ருழவாளர் காண்.

(தமிழ்நாவலர் சரிதை)

....தேமருவு
நாவிற் புகழ்கம்ப நாடற் கடிமையென்றே
மாவைக் கரைத்துமுன்னே வைக்குங்கை.

(திருக்கை வழக்கம்)

எத்தளித் தாயிரம் பாடல்கொண் டேகிரை யீந்தெருமைப்
போத்தளித் தாடையும் பூணா முந்தந்து போதுறவாய்க்
காத்தளித் தாதரித் திட்டதல் லாமலுங் கம்பருக்கு
மாத்தளித் தாட்பட்டு வாழ்வதன் றேதொண்டை மண்டலமே.

(தொண்டைமண்டல சதகம்)

---

* மினுமி எனவும் பாடம்.

† துந்துரு திருதுருமி எனவும் பாடம்.

கம்பர் பிரதாபருத்திரனிடத்துப்போய் அவன் அடைப்பை கட்டிவரப் பாடிய வெண்பா.

அவனிமுழு துண்டு மயிரா வதத்துன்
பவனி தொழுவார் படுத்தும்—புவனி
யுருத்திரா வுன்னுடைய வோரங்க னாட்டிற்
குருத்திரா வாழைக் குழாம்.

(தமிழ்நாவலர் சரிதை)

அவனியிலுள்ளா ரனைவரும் போந் துண்டலாலும் அயிராவதம் போன்றயானைமேல் நீ உலாவரும்போது நின்னைத்தொழும் பருவ மாதர்கள் காமவெப்பம் ஆற்றாமற் குளிர்ச்சி எய்தல் வேண்டிப் பரப்பிப் படுத்தலாலும் வாழைக்குழாங்கள் குருத்திராவாயின என்க. அவனிமுழுதும் போந்துண்டலால் இலைபற்றாமற் குருத்தையும் அறுத்துப்பரப்ப வேண்டிற்று என்பது. வெப்புற்றார் குளிர்ச்சி யெய்தற்கு வாழைக்குருத்தைப் பரப்பிப்படுப்பதுண்டு. உருத்திரன் என்பான் காகதீயர் கணபதிகள் எனப்பெயரிய ஆந்திர ராஜாக்களுட் சிறந்தவன். இவனைத் திரிபுவனமல்லன் என்னுங் கணபதி ராஜன் பேரன் எனவும் புரோலிராசன், மப்பம்மதேவி இவர்களருமைமகன் எனவுஞ் சொல்லுப: இவன் மேற்குறித்த இராசவமிசத்து மூன்றாம் பட்டமெய்தினோன் எனக்கூறுப. இவனை முதலாம் பிரதாபருத்திரன் என்றலுமுண்டு. இவனுடைய சாஸநங்கள் கி. பி. *1162, *1179, *1197 இவ்வாண்டுகளிற்றோன்றியன சிலவுள. இதைப்பற்றிக் கம்பர்காலம் கூறும்வழி விரித்துக் கூறுவேன். இவ்வுருத்திரன் ஆந்திரராசன் எனத் தெளியப்படுதலாலும் கம்பர் இவ்வரசனாற் புலமைபற்றிப் பேரன்பு பாராட்டப்பட்டா ரென்பதனாலும் கல்வியிற் பெரியாருக்கு ஆந்திருடன் நன்று பயிலுதற்கேற்ற தெலுங்குமொழி யுணர்ச்சியும் உண்டென்று கொள்ளப்படும். இவர் பாடியருளிய இராமாவதாரத்துச் சில தெலுங்குமொழிகள் சிறுபான்மை ஆங்காங்குப் பயின்றிருத்த லுணரப்படுதலாலும் இக்கருத்து வலியுறுதலாகும். இராமாவதாரம் எழுச்சிப்படலத்து,

* Dr. Sewell's List of Antiquities, Madras, Vol II, Page 173.
* " " Vol I " 31.
* " " " " 71.

தோண் மிடைந்தன தூண மிடைந்தென
வாண் மிடைந்தன வான்மின் மிடைந்தெனத்
தாண் மிடைந்தன தம்மி மிடைந்தென
வாண் மிடைந்தன வாளி மிடைந்தென.

என்ற செய்யுட்கண் தம்மி என்பது தெலுங்குமொழி; தாமரை என்னும் பொருட்டு. மற்றை மூன்றடிகளிலும் தோளுக்குத் தூணமும் வாளுக்கு வான்மின்னும், ஆளுக்கு ஆளியும் உவமையாக வந்தனபோல இவ்வடிக்கண்ணும் தாளுக்குத்தம்மி உவமையாக வந்தது. இம்மொழியுணர்ச்சி யெய்தப்பெறார் தம்மின் எனப்பாடமோதிப் பொருளிடர்ப்படுவர். மந்திரப்படலத்து,

திக்கயம் வலியில தேவர் மெல்லியர்
முக்கணன் கயிலையு மூரணின் றுயது
மக்களுங் குரங்குமே வலிய வாமெனி
னக்கட விராவணற் கமைந்த வாற்றலே.

என்ற செய்யுட்கண், அக்கட என்னுந் தெலுங்கு மொழி வந்தது. இராவணன்வதைப் படலத்து

அந்துசெய் குவெனென வறிந்த மாதலி
யுந்தினன் றேரொனு மூழிக் காற்றினை
யிந்துமண் டிலத்தின்மே விரவி மண்டிலம்
வந்தென வந்ததம் மானத் தேரரோ.

என்ற செய்யுட்கண் அந்து என்பதும் அது. இவற்றுள் தெலுங்கு மொழிப் பெருநூல்களிலெல்லாம் நன்றுவழங்கப்பட்ட தம்மி என்னும் அரும்பதத்தையும் எடுத்தாண்ட சிறப்பாற் கம்பருக்கு அம்மொழி நூலுணர்ச்சியுமுண்டு என்றும் ஊகித்தலாகும்.

இவர் சோழனாற் கொலையுண்டது.

கம்பர் மிக்க சிறப்புடன் சோணாடெய்தி வாழ்கின்றபோது சோழன் அவருடைய பேராற்றலுக்கு அஞ்சி வஞ்சமாக இவர்பாற் பெருநண்பினன்போல ஒழுகத்தலைப்பட்டான். கம்பரும் தம்முடைய பெருவலி சோழற்கு நன்குணர்த்தப்பட்டதாகலின் இனி அவனாற் றமக்கொரு தீங்கும் இழைத்தலாகாதென்று அவனது நண்பினை

நம்பி ஒழுகுவாராயினர்: இவ்வாறொழுகுகின்ற காலத்துச்சோழன் தன்னினும் பெருவலியுடைய ஓரங்கலுருத்திரனைத் தமக்கு அடைப் பைகட்டிவரப் புரிந்த கம்பர் ஒருகாற்றன்மேல் அவனைப்படையெடு த்து வரவும்புரிவரோ என்று ஐயமேமிகுத்து இவரைப்பிறரறியாமற் கொன்றுவிடுதலே நலமென்றுகருதி ஒருநாள் தன்னரண்மனைக்கவர் வரும்போதறிந்து அவர்வரும்வாயிலிற் கூட்டிலடைக்கப்பட்டதோர் புலியைத்திறந்துவிட்டிருந்தனன். அப்போது கம்பர் அவ்வழியே வரப் புலி கண்சிவந்து வான்முறுக்கி வெகுண்டெழுந்து அவரைக் கொல்ல நெருங்கிற்று. அதுகண்டு கம்பர் தம்மைக்கொல்லவந்த புலியினுபிருண்ணுமாறு

(கம்பர்மேலே சோழன் புலியைக் கோல்லவிட்டபோது பாடியது)

வெங்கண் சிவந்து வெடிவான் முறுக்கி வெகுண்டெழுந்தென்
னங்கம் பிளக்க வரும்புலி யேயன் றிரணியனைப்
பங்கம் படப்பட வள்ளுகி ராலுரம் பற்றி யுண்ட
சிங்க மிருப்பது காண்கெடு வாயென்றன் சிந்தையுள்ளே.

(தமிழ்நாவலர் சரிதை)

என்னும் பாடலைப்பாடி நரசிங்கப்பெருமானைத் தியானித்து நின்றார்; அவ்வளவிற் புலியுயிர்மாய்ந்து வீழ்ந்தது. இதனைக்கண்ணுற்று ஒளி த்துநின்ற சோழன் இவரைக் கொல்லவந்த புலியும் உயிர் மாய்ந்த தற்கு நொந்து தன்கையிலிருந்த வில்லில் அம்பினைக்கோத்து இவர் திருமார்பு குறித்துவிடுக்க அது கல்வியிற்பெரியாரது அறிவு வீற் றிருந்த செறிவுடை நெஞ்சிற் பட்டுருவிப்போயிற்று. அங்கிலையே அறிவொருவடிவாந் திருவுருத்தளர்வார் இவையெல்லாம் சோழன் செய்த வஞ்சமென்று குறித்துணர்ந்து அம்புபோந்தவழியேநோக்கி அவனைக்கண்டு,

(சோழனெய்தபோது கம்பர் பாடியது.)

வில்லம்பு சொல்லம்பு மேதகவே யானாலும்
வில்லம்பிற் சொல்லம்பு வீறுடைத்து-வில்லம்பு
பட்டுருவிற் றென்னையென் பாட்டம்பு நின்குலத்தைச்
சுட்டெரிக்கு மென்றே துணி.

(தமிழ்நாவலர் சரிதை)

என்னும் பாடலைக்கூறிச் சபித்துவிட்டுத் தம்மாருயிர்த்துணைவனை சடையவள்ளலது அரியபெரிய நன்றியையே நினைந்து நினைந்து நெடி துருகி,

(கம்பர் மரணகாலத்திற் பாடிய கவி.)

ஆன்பாலுந் தேனு மரம்பைமுதன் முக்கனியுந்
தேம்பாய வுண்டு தெவிட்டுமனந்—தீம்பாய்
மறக்குமோ வெண்ணெ வருசடையா கம்ப
னிறக்கும்போ தேனு மினி.

(தமிழ்நாவலர் சரிதை)

என்னும் செய்யுளால் அன்புபாராட்டி இக்கொடிய உலகத்தை நீத்து அந்தமிலின்பத் தழிவில்வீடெய்தினர். இவ்வினிய செய்யுள்,

ஆன்பா னறுந்தேன் முக்கனிநீ டமுதிற் சுவையா றுடனருந்தித்
தான்பா லிணைய மறப்பதில்லைச் சடையா வென்று தமிழோதுந்
தேன்பா யலங்கற் கம்பனுக்குச் செழும்பா ரிடத்திற் செய்தநன்றி
வான்பா லிருக்கச் செய்து நலம் வைத்தார் சோழமண்டலமே

என்பதனாற் சோழமண்டல சதகத்தினும் பாராட்டப்பட்டிருத்தல் காண்க. இக்கல்வியிற்பெரியர் தெய்வவரம்பெற்றுக் கவிசொல்லப் புக்கபோது பாடிய முதற்பாட்டு "மோட்டெருமை வாவிபுக" என்பது; அதன்கண்ணும் சடையனே பாராட்டப்பட்டுளான் என்பது முன்னரே யறியப்பட்டதாகலின் இவர் வாழ்நாள்களிற் பாடிய பாடல்களில் முதலும் ஈறும் சடையனைப்பற்றியனவாதல் ஈண்டைக்கு நினைக்கத்தக்கது. கம்பர் இறந்ததுகேட்டுச் சோழனவைக்குரிய பலவர் பெருமக்களெல்லாம்,

(கம்பர்பேரிலே பாடிய கையறம்.)

இன்றோநங் கம்ப னிறந்தநா ளிப்புவியி
லின்றோநம் புன்கவிகட் கேற்றநா-ளின்றோதான்
பூமடந்தை வாழப் புவிமடந்தை வீற்றிருப்ப
நாமடந்தை நூல்வாங்கு நாள்.

(தமிழ்நாவலர் சரிதை)

எனப்பாடி யிரங்குவாராயினர். தமிழ்நாவலர் சரிதைக்கண் கம்பனைக்கொன்றானென்று பழிகூறிய பாண்டியனிடத்திற் சோழன் விட்ட புலவன் முடிசூட்டு மங்கலநாட் பாடிய வசை.

பாண்டியரிற் பாண்டியரிற் பாழான பாண்டியரி
லீண்டிரென விட்ட வெழுத்தல்ல-பூண்டதிருப்
போகவென் றும் வேற்றார் புகுதவென்று நீயிவண்விட்
டேகவென் றும் விட்ட வெழுத்து.

இதுகேட்டு நன்றாகவே பொருள்கூறிப் பரிசில்கொடுக்க மறுத்தான்; நீ வந்த காரியம் வேண்டிற் சோழன்பாற் போகென்றான்.

எனத் தலைக்குறிப்பும், கீழ்க்குறிப்பும் பெற்ற ஓர் செய்யுள் காணப்படுகின்றது. இதனாற்சோழன் கம்பரைக்கொன்ற கொடும்பழி எங்கும் பரவியதென்றும் பாண்டியன் தன்னைப் பழித்துரைத்ததற்கு வெட்கி அவனைப்பழித்துப்பாடுதற்காக அவனது முடிசூட்டு மங்கல நாளிற் சோழன்றன் புலவனைவிடுத்துவசைபாடச்செய்தனனெனவும், போந்த சோழன் புலவன் தான்பாடிய வசைப்பாட்டிற்கு நன்றாகவே பொருள்கூறினன் எனவும், அதுகேட்டுப்பாண்டியன் அவனுக்குப் பரிசில்நல்கினன் எனவும், புலவன் பழிகூறவந்தானன்றிப்பரிசில்பெற வந்தானில்லையாதலால் மறுத்தான் எனவும், பாண்டியன் அதுகேட்டு நீ பழிகூறவந்தனையாயின் அதற்கென்பாற் காரியமில்லை கம்பரைக் கொன்ற கொடும்பழியையுடைய சோழன்பாலே அது கூறற்குச் செல்க என்றுகூறி அப்புலவனைச் செலவிடுத்தனன் எனவும் அறியப்படும். கம்பர் இறந்தபின்னர் சோணாடு ஓரங்கற்கணபதியரசர்களாற் படையெடுத்து வெல்லப்பட்டு சோழரது பெருமையெல்லாம்போய் அவ்வரசர் வமிசமும் அருகித்தொலையத் தலைப்பட்டதாகும். கம்பரை அம்பாலெய்துகொன்றவன் விக்கிரமனுக்குப்பின்னுண்ட குலோத்துங்கனுக்குப்பின் னரசெய்திய இராசராசன் என்பவனவன். இச்சோழனுக்குப்பிற்பட்டு அப்பரம்பரைப்பழைய சாஸநங்கள் காணப்படாமையும் ஓரங்கலரசர் இக்காலத்துச் சோணாடுவென்றுண்டனர் எனச் சாஸநங்களாலறியப்படுதலுமே இச்சோழராச்சியம் கெட்டு வங்கிசமும் கம்பர் தெய்வவாக்குப்படி அருகித் தொலைந்ததென்பதற்குத்தக்க சான்றாகும். இச்சோழற்குப்பின்னே சங்கமன், நல்லமன், சங்கரன், குமாரகுலோத்துங்கன் எனச்சில சோழவரசர்கள் அரசாண்டது குமாரகுலோத்துங்கன் கோவையாலும், சங்கரசோழனுலாவாலும் அறியப்படுமாலெனின் அவரெல்லாம் இராசராசன் வரையரசாண்ட சோழரைப்போலச்சோணாட்டின் ஏகாதிபத்தியம் உடையராய்ச் சிறந்தனரெனக் கூறுதற்காகாதென்க: இவருடைய சிற்றரசாட்சியும் சின்னாளிற் சிதைந்ததென்று கொள்ளத்தகும்.

(இன்னும் வரும்)

இங்ஙனம்,

ரா. இராகவையங்கார்,

பத்திராசிரியர்.

உ

ஓர் தமிழ்ச் சாஸநம்.

இதனடியில் எழுதியுள்ள சாஸநம் திருப்பதித் திருமலையில் வேங்கடேசப்பெருமாள் கோயிலின் இரண்டாம் பிராகாரத்தின் வடவண்டைச்சுவரில் வெட்டியிருக்கிறது. இது உத்தேசம் 20-அடி நீளமும் 3-அடி அகலமுமுள்ள இடத்தை அடைக்கிறது. சில கோயில்களிற்போலில்லாமல், சுண்ணும்பு செம்மண் இன்றிச் சுத்தமாயிருத்தலோடுங்கூட, இச்சாஸநம் செவ்வையாய் வெட்டப்பட்டிருக்கிற எழுத்துக்களை புடைத்தாயது. இஃது, இக்கோயிலை நாரசிங்க தேவ யாதவராயன் காலத்துப் புதுப்பித்தபோது, பழங்கோயிலிலிருந்த சிலாலிகிதங்களை ஏட்டிலெழுதிக்கொண்டு, பின் புதுக்கோயிலில், இப்பொழுது காணப்படுமிடத்தில் வெட்டுவிக்கப்பட்டதென்று இச்சாஸநத்தால் தெரியவருகிறது. இவ்வாறு புராதனவெழுத்துக்களை யெடுத்தெழுதிய அக்காலத்தேயே சரிவர வாசிக்க வாராததனுல் தப்புத் தப்பாய் எழுதப்பட்டிருக்கிறது. பழைய சாஸநத்திற் கூறியிருக்கும் அரசர்கள் பெயர்களே சிற்சிலவிடங்களில் வழுக்கள் பொதிந்துள்ளன. ஆயின், இவ்வரசர் மெய்க்கீர்த்திகளைக்கொண்டு ஐயந்திரிபற இப்பெயர்களைத் தீட்டலாம். இச்சாசனத்திற்காணப்படும் வழுக்களை ஆங்காங்கு எடுத்துக்காட்டுவோம்.

இச்சாஸநம் திரும்ப எழுதிய காலத்திருந்த நாரசிம்மதேவன் யாதவவம்சத்தான்; இத்தலைமுறையார் சோழசக்கரவர்த்திகளைச் சார்ந்தாண்ட சிற்றரசர்கள். 2-ம் வரியிற் குறித்திருக்கும் அரசன் பெயர் கோஇராசகேசரி வர்ம்மன் ராஜராஜதேவன் என்றிருக்கவேண்டும். இம்முதற் சாஸநத்துக் கூறியிருக்கும் பொன்மாளிகைத்துஞ்சின தேவர் என்பது ராஜராஜன் தந்தையாகிய இரண்டாம் பராந்தகன் என்று இவன் மனைவியின் பெயராகிய 'பராந்தகன் தேவியேன்' என்பதனுற் கொள்ளவேண்டும். இப்பராந்தகன் மனைவி சேரமானர் மகளார் என்றும் ஏற்படுகிறது. இவ்வம்மைக்கு, ராஜராஜன், மகனே அல்லனே என்பதைக்குறித்து ஒருவாறும் கூற இடமில்லை.

*

இருப்பின், தன்தாயாகிய சேரமானுர் மகளார் பொன்மாளிகைத் துஞ்சிய பராந்தகனுர் தேவியார் என்று சொல்லியிருக்கலாமே. இப்படி இல்லாததினுலேயே சொந்தத்தாய் அல்லள் என நினைக்க இடமுண்டாகிறது.

இரண்டாம் சாஸநத்திற் சொல்லியிருக்கும் அரசன் சோழசக்கரவர்த்தியாகிய ராஜமஹேந்திரன் என்றிருக்கலாம்போல் தோன்றுகின்றது. காடவன், காடபட்டிகள், நுளம்பன், பல்லவன் என்பன ஒருபொருட் பன்மொழிகள். இதிற் கூறியிருக்கும் காடவனும் சோழர்கள் கீழிருந்தாண்ட சிற்றரசனுயிருத்தல் வேண்டும். பெற்கடையார் என்பது, அரசன் பெருந்தனத்தாரில் ஒருசாரார் பெறும் பட்டப்பெயர். இப்பெயரையமைத்து உண்டாக்கப்பட்டிருக்கும் ஹெக்கடதேவன்கோட்டை தாலூக்காவின் பெயரையும் காண்க. இச்சாஸநங்களில் கோப்பா-ஆ கேசரி என்றிருக்கும் தொடர், கோ பரகேசரி என்பதின் வழு. மூன்ரும் சாஸநத்து கோபரகேசரிவர்ம்மரான இராஜேந்திர சோழதேவர் மேற்கண்ட ராஜராஜதேவர் புதல்வர். பூர்வதேசமும் கங்கையும் கடாரமும் கொண்ட ராஜேந்திரனென்று புகழ்படைத்தவர். அதிகாரிகள் கொற்றமங்கலமுடையான் என்பவன் பெயர் பெரிய லெய்டன் சாஸநத்திலும் வருகிறது.

இச்சாஸநத்தில்வரும் ஊர் பெயர்களில் திருச்சுகனுர் என்பது, பழைய சாஸநங்களில் திருச்சோகினூர் என்றும், இப்பொழுது யோகிமல்லவரமென்றும் பெயர்படும். இது திருப்பதிக்கு அடுத்த திருச்சானு*ரின் ஒரு வீதி யென்னலாம்படியான அவ்வளவு சமீபத்துள்ளது. இதிலொரு சிவாலயமுண்டு.

சிலமாதங்கட்குமுன் சாஸநபரீக்ஷகரான ஸ்ரீமாந்-வி. வெங்கய்யரவர்கள், யோகிமல்லவரத்துக்கோயிலின் சாஸநங்களையும், திருமலையின் சாஸநங்களையும் பரிசோதித்து, யோகிமல்லவரத்துக் கோயிலுக்குத் துணைக்கோயிலாய் சுப்பிரமணியக்கடவுட்கு திருமலைக் கோயில் கட்டப்பட்டிருத்தல் வேண்டுமென்றும், அறியாச்சனங்கள்

* இப்பெயரும் திருச்சுகனூரின் மரூஉ வென்பதைச் சொல்லவேண்டுவதில்லை.

கூறும் கூற்றுச் சரியாயிருக்கலாமென்றும் சாதித்தார். அக்கனவா னின் முக்கிய ஆதாரம், திருமலைக்கோயிற் சாஸநத்தில் அக்கோயி லை இளங்கோயில் என்று கூறியிருத்தலும், வடதேசத்தார் வேங்க டேசப்பெருமானை 'பாளாஜி' யென்று கூவுவதுமே. மீயச்சூர் இளங்கோயில் என்பனபோன்ற தொடர்களில் இளையபிள்ளையாகிய சுப்பிரமணியக்கடவுள் கோயிலென்று விளங்குதலால், இதுவும் அவ் வாறே இருத்தல்வேண்டும் என்பது ஐயரவர்கள் கொள்கை.

அதற்கு, யான், இச்சுப்பிரமணியர் கோயில் தேவாரம்பாடிய காலத்திருந்திருப்பின், காளத்தியைப் பாடச்சென்ற நாயன்மார்கள் இதையும் பாடாது விடார்களென்று மறுத்தேன். அன்றியும், அக் காலமேயன்றிப் பிற்காலமாகிய இரண்டாம் பராந்தகன் காலத்தும் இக்கோயில் சைவமாயிருக்கக்காணேம். இராஜராஜன் காலந்தொ டங்கி வைஷ்ணவக்கோயிலேயா யிருந்ததென்பதற்கு ஐயமேயில்லை என்று யான் கூறிய கூற்றிற்கு, ஐயரவர்கள், ராஜராஜன் காலத்திய சாஸநமே தமக்குத்தெரிந்தவரையில் அவ்விடத்திலில்லையென்றும், அப்படியிருப்பினும் வைஷ்ணவமென்று கூறியிராதென்றும் மறுத் தார்கள். சாஸநபரீக்ஷகர்கள் ஒவ்வொரு கோயிலின் சாஸநங்களை யும் முற்ற ஆராய்தல் வழக்கம் என்று யான் இதுகாறும் எண்ணியி ருந்தேன். இவர்கள் இச்சாஸநம் இருப்பதாக அறியாததினால், முற்றும் ஒரே தடவையாய்ப் பரிசோதிக்கிறது இவ்வுத்தியோகத்தின் வழக்கமன்று என்று தோன்றுகின்றது. இப்பொழுதாயினும் ஐயர வர்கள் இச்சாஸநத்தில் ஆங்காங்குக் காணப்படும் "ஸ்ரீவைஷ்ணவரி ரக்ஷை" என்றிருத்தலானும், "பன்மாஹேஶ்வரரக்ஷை" என்றில் லாதிருத்தலினாலும் இக்கோயில் வைஷ்ணவமாயே யிருந்திருத்தல் வேண்டும் என்று கொள்வாராக. இராஜராஜன் சாஸநம் அவ்விடத் துக்கிடையாது என்று வாயடித்துவிட்டவர், இப்பொழுதாவது அதன் பிரதியொன்று தருவித்துக்கொள்வாரென்று நம்புகிறேன். மேலும் ஐயரவர்கள் தாமே இச்சாஸநத்தைக்குறித்து எழுதியிருக்க (Christian College Magazine Vol. 8 Page 103) அவருக்கு இப்பொழுது சமயோசிதமாக மறதி ஏற்பட்டது வியக்கத்தக்கதே. சாஸந சமாசாரங்கள் இவ்வாறு நிற்க ;

ஒரு விஷயத்தைக் குறித்து ஒன்றைச்சாதிக்கப் புகுவானொருவன், தன் கூற்றிற்குப் பலாபலங்களை யாராயவேண்டாவோ? இக்கோயிற்பெருமாளின் ஹரிஹராகாரத்தைக்குறித்துப் பேயாழ்வார்-

"தாழ்சடையும் நீண்முடியு மொண்மழுவும் சக்கரமும்
சூழரவும் பொன்னாணும் தோன்றுமால்—சூழும்
திரண்டருவி பாயும் திருமலைமே லெந்தைக்கு
இரண்டுருவு மொன்றா யிசைந்து"

எனவும்,

"பண்டெல்லாம் வேங்கடம் பாற்கடல் வைகுந்தம்
கொண்டங் குறைவார்க்குக் கோயில்போல்—வண்டு
வளங்கிளரும் நீள்சோலை வண்பூங் கடிகை
இளங்குமரன் றன்விண் ணகர்"

எனவும்,

"குன்றொன்றி னாய குறமகளிர் கோல்வளைக்கை
சென்று விளையாடுந் தீங்கழைபோய்—வென்று
விளங்குமதி கோல்விடுக்கும் வேங்கடமே மேலை
இளங்குமார் கோமா னிடம்"

எனவும் வர்ணித்ததன்பொருளை யோரார்போலும்! பரமகாருணிகரான பெரியவாச்சான்பிள்ளை பின்னிருபாட்டுகளுக்கும், "முன்பெல்லாம் ஸ்ரீவைகுண்டத்தைக் கோயிலாகக்கொண்டு அங்கு நித்யவாஸம் செய்கிற ஸர்வேஶ்வரனுக்கு (இப்பொழுது) திருமலை, திருப்பாற்கடல், வண்டுகள் கும்பல் கும்பலாய்க் கிளம்புகிற விசாலமான தோப்புக்களையும் அழகிய புஷ்பங்களையுமுடைய திருக்கடிகை, நித்யயௌவனமுடைய ஸ்ரீய:பதிக் கிருப்பிடமான திருவிண்ணகர் (ஆகிய இவைகள்) கோயில்போலே இருக்கின்றன" என்றும், "திருமலையொன்றையே வ்யாஸமாகவுடைய குறப்பெண்கள்போய் அழகிய வளைகளையுடைய கைகளால் (பிடித்து) விளையாடாநின்ற அழகிய மூங்கில்கள் மேற்புறம் வளர்ந்து, (ராஹுவை) ஜயித்து (அதினால்) வ்யாகுலியாநின்ற சந்திரனுடைய ஆபத்தைப்போக்காநின்ற திருமலையே, அண்டத்துக்கு மேலுள்ள பரமபதத்தில் வாஸம் செய்கிற யௌவனாரம்பத்தையுடைய நித்யஸூரிகளுக்கு ஸ்வாமியான ஸர்வேஶ்வரனெழுந்தருளியிருக்கும் தேசம்" என்றும் பொருள் செய்திருத்தலானும் இளங்கோயில் என்னும் தொடர்மொழிக்குக் கார்த்திகேயன் கோயிலன்று என்பது தெளியலாமே. பின்னும் சிலப்பதிகாரம் காடுகாண் காதையில்

''விங்குநீ ரருவி வேங்கட மென்னு
மோங்குநீர் மலையத் துச்சி மீமிசை
விரிகதிர் ஞாயிறுந் திங்களும் விளங்கி
யிருமருங் கோங்கிய விடைநிலைத் தானத்து
மின்னுக்கொடி யுடுத்து விளங்குவிற் பூண்டு
நன்னிற மேக நின்றது போலப்
பகையணங் காழியும் பால்வெண் சங்கமுந்
தகைபெறு தாமரைக் கையி னேந்தி
நலங்கிள ரார மார்பிற் பூண்டு
பொலம்பூ வாடையிற் பொலிந்து தோன்றிய
செங்க ணெடியோ னின்ற வண்ணமும்''

என்று இளங்கோவடிகளார் வெட்டெனக் கூறியிருத்தல் கண்டும் சைவமென்றிக்கோயிலை எவ்வாறு கூறுதல் கூடும்? ஐயரவர்கள் மேற்கோள் எடுத்தாளுவதெல்லாம் நாலாயிரப்பிரபந்த முதலாக நான்கு, அல்லது அதிகமாயின், ஐந்து நூல்களே. அவைகளினின்று கிலும் நன்றாய் ஆராய்ச்சிசெய்து எழுதினாரில்லையே யென்று விசனிக்கத்தக்கதாயிருக்கிறது. சிலப்பதிகாரத்திற்கண்ட வரிகள் அவர்கள் ஆராய்ச்சி மட்டும் எட்டவில்லைப் போலும்? இவைநிற்க;

அஷ்டாதசபுராணங்களையும் மேற்கொண்டு எழுதிய வேங்கடேசமஹாத்மியத்தில் இளங்கோயில் என்னும் பெயர்வருவதற்கு ஒரு வாறு காரணங் கூறப்பட்டுள்ளது. *ஆதியில் இக்குன்றிலிருந்தவர் ஆதிவராக நாயினர்; இவரிடத்து வந்து வேங்கடேசர் தாமிருத்தற்குக் கொஞ்சம் இடம்வேண்டி இரக்கத் திருப்பன்றியாழ்வார் வேங்கடேசரை நோக்கி, உமக்கு இடம் கொடின் நம்மை மதிப்பாராரென்று வினவ, கோலவராகர்க்கு, அவரைப்பணியாது தம்மைத் தரிசிக்கவருமவர்களுக்குப் பலன்யாதுமில்லாது போகக்கடவதென்று வேங்கடேசர்வாக்களித்துப் பின்தன்கோயிலை ஏற்படுத்திக்கொண்டாரென்பது பிரசித்தம். புராணங்களிலெல்லாம் ஒரே வண்ணமாய்ச்சொல்லியிருத்தலின், கடுகளவேனும் மெய்ம்மையைக் கொண்டேபலவேறுகதை

* இதனையே பேயாரும் ''புரிந்து மதவேழம் மாப்பிடியோ டேடித், திரிந்து சினத்தாற் பொருது—விரிந்தசீர், வெண்கோட்டு முத்துதிர்க்கும் வேங்கடமே மேலொரு நாள், மண்கோட்டுக் கொண்டான் மலை'' என எடுத்துக்காட்டியிருக்கிறார்.

களைக்கட்டியிருத்தல் வேண்டுமென்று கொள்ளல் தகாதோ? முதுகோயில் திருப்பன்றியாழ்வாரதாயின் இளங்கோயில் வேங்கடேசரதாயிருக்கலாமே. இப்படியின்றி எட்டுமைலுக்கப்பாலுள்ள ஒரு சிறுசிவாலயத்திற்குத் துணைக்கோயிலாகக் கொள்வானேன்? அதுவுமன்றி, வீரராஜேந்திரன் காலத்துக்கு முந்திய சாஸநங்களே காணப்படாத சிவன்கோயிலுக்குத் துணைக்கோயில், ராஜராஜன் தந்தை காலத்திய சாஸநங்கூடவிருக்கும் திருமலைக்கோயிலென்று சொல்வது சாஸநவாராய்ச்சியின் வழிபோலும்!

நமக்குப் பேயாழ்வார் சாதித்தருளினபடி, ஹ்ரிஹராகாரமாய் நின்றருளுகின்றார் வேங்கடேசர் என்பதே துணிவு. இவ்விருருவுமிருத்தல் பற்றியே இப்பொழுதும் திருத்துழாயும் வில்வமுங்கலந்தே இக்கோயிலிற் கடவுளை அருச்சிக்கின்றார்கள். சாஸநங்களில் ஒன்றுங் கிடைக்காதிருப்பின், பண்டையிலக்கியத்தின் கூற்றுக்களைக் கொள்ளலாமே; நீக்கவேண்டுவதில்லையே. இனியாகிலும் ஐயரவர்கள் சாஸநவாராய்ச்சியோடு ஆங்காங்கு இலக்கிய ஞானத்தைச் சேர்த்துப் பிணித்துக் கதைகட்டுவார்களாமாறு சைவம்வைஷ்ணவமென்னும் எல்லாம்உணரவல்ல இறைவனைப்பிரார்த்திக்கிறேன்.

எம். நாராயணசாமி அய்யர்,
திருவல்லிக்கேணி.

சாஸநம்.

[I] ஸ்வஸ்திஸ்ரீ நாயனார் வீரநாரசிங்கதெவயாதவராயற்கு யாண்டு நாற்பதாவது ஐப்பசிமாதம் இருபதாந்தியதி கொயிலாழ்வார்க்கு கொயிலுக்குகொயில்செய்ய தெசாந்திரிகளில் திருப்புல்லாணி ஊஸர் ஆரம்பிக்கையில் முன்பத்தை கொயில்ஆழ்வாரில் கல்வெட்டுப்படி எடுத்து முதல் ப்ராகாரத்திலெ வடக்குவீசையில் புறவாயிலெ கல்வெட்டுவிப்பதென்று தானத்தார்க்கு நாயனார் திருமுகம் வருகையில் திருமுகப்படி கல்வெட்டுவதென்று தானமாக நியமிக்க இவ்வாண்டை சித்திரைமாதம் உ௰௨ ந்தியதி வெள்ளிக்கிழமை உத்திராடத்து நாள் கல்லுவெட்டினபடி ஸ்வஸ்தி —

[2] ஸ்ரீ திருமகள்போலப் பெருநிலச் செல்வியும் தன்கோனுரிமை1 பூண்ட மனக்கொள காந்தளூர்ச்சகல2 கலையறுத்தருளி வெங்கை நாசமும்3 துளப்பாடியும்4 கங்கபாடியும் கடிகைவிழியும்5 குடமலைநாடும் கொல்லாபுரமும்6 கலிங்கமும் திண்டிறல் வென்றிதண்டால்வளைகொண்ட 7 தன்னெழில்வரைவாழியுள் 8 ளெல்லாம் ஆண்டு சொழுதக9 பிவைகும்ஆண்டெ செழியன்10 தெசுகொள் கொவீர 11 ராஜராஜெஷ்ரு பன்மற்கு யாண்டு ௰௬ வது செரமானூர் மகளார் பொன்மாளிகையில் துஞ்சினான் 12தெவியார் தெவி அம்மனார் திரு13வெங்கடதெவற்கு இட்டபட்ட—

[3] ம் குடினைக்கல்லால் பொன் றுய........தில் முத்தின் மாணிக்கம் உ ம் தடவிக்கட்டின மாணிக்கம் ஆறும் வயிரம்நாலும் முத்து இருபத்தெட்டும் இப்பட்டம் [இ*]ட்டார் பராந்தகதெவி அம்மனெ [II*]ஸவஸிஸ்ரீ கொப்பாதூஜெஹெஷ்ரு பன்மற்கு யா
வத
ண்டு ௰௪ வது சத்திவிடங்கநாகிய ஸ்ரீகாடபட்டிகள்14 தெவியார் மகள்சாமவையாகியகாடவன்பெருந்15தெவியென் ஸ்ரீ16வெங்கட

---

1 தனக்கேயுரிமை.

2 சாலைகலமறுத்தருளி என்க.

3 நாடும்.

4 நுளம்பபாடியும்.

5 தடிகைவழியும்.

6 கொல்லமும்.

7 வளை என்னுஞ்சொல் அதிகமாய் இவ்விடத் தெழுதியுள்ளது. மற்றைச் சாஸநங்களில் கிடையா.

8 வளர் ஊழியுள்ளெல்லாயாண்டு.

9 தொழுதக விளங்கும்.

10 செழியனை.

11 கோவிராஜராஜபன்மற்கு.

12 தேவியார் தேவி அம்மன்.

13 திருவேங்கடதேவற்கு.

14 தேவியார்.

15 தேவியேன்.

16 வேங்கடத்து.

[*] வரிபிளந்து எழுதப்பட்டன.

த்து எழுந்தருளிநின்றபெரும[ானடிக*]ளுக்கு ௬௨௨-ா சுனை வ கொண்டருள திருவிள்ளங்கொயிலில் எழுந்தருளுவித்த வெள்ளி திரு1மெனிதிருமுடி—

[4] யி[ல் கட்டி*]ன வயிரம் ௨௰௫ம் பருமுத்து ௰. [நடு*] நாயகமான மாணிக்கம் ௨ம் தடவிக்கட்டின ௫ம் ஆக மாணிக்கம் ௫ னால் திருமுடி ஒன்றும் திருக்காதில் பொன்னின் மகரம் இ[ர*]ண்டும் பவழத்தின் கொப்பு ஒன்றும் திருக்கழுத்தின் மாலையி 2லெறின வயிரம் ௧௪ம் மாணிக்கம் ௫ம் பருமுத்து ௧௪ம் நெர் 3முத்து பலவும் இட்டுக்கட்டின மாலை ௧ம் பொன்னீன் 4 உதரபெந்த(ள†)ம் ௧ம் திருவரைப்பட்டிகை ௧...பட்டுக்கட்டின மாணிக்கம் ௧ னால் பட்டிகை ௧ம் வாஹு வலையம் ௨ க்குத்தடவிக்கட்டின மாணிக்—

[5] கம் ௨ம் தடவிக்கட்டின மாணிக்கம் ௨ கட்டின திருச்சந்தம் ௧ம் திருக்கைக்கழுத்தின் வ[லை*]யில் ௪ம் திருக்காலு5க்கழுத்தின் காறை ௨ம் இடையிட்டபொன்னின் மணியும் பவழமும் முத்தும் ஆக ௨௫ ௫௰௨ பாதசாயலம் ௨ம் வெள்ளி வூமெஹயில் 6எறின நாயகமான மாணிக்கம் ௧ம் இத்தனை ஆபரணங்களும் இட்டுசெய்த பொன் ௪௰௭ ~7 ம் இத்தனையும் கொண்டுஅபி 8ஷெகமும் செய்வித்து எழுந்தருளுவித்த மணவாளப்பெருமாளுக்கு ஸ்ரீவெ 9ங்கடகொட்டத்து திருக்குடவூர் நாட்டுத் திருச்சுகனூர் ஸமெஹயார் பக்கலும் மடமுடை—

---

1 திருமேனி.

2 மாலையிலேறின.

3 நேர்முத்து.

4 பொன்னின் உதரபந்தம்.

5 லி என்பதைத்திருத்தி லு என்று எழுதப்பட்டுள்ளது.

6 ஏறின.

7 ‘கழஞ்சு’ என்னும் வார்த்தையைக் குறிக்கும் அடையாளம்.

8 அபிஷேகமும்.

9 வேங்கடக்கோட்டத்து.

[*] வரிபிளந்து எழுதப்பட்டன.

(†) இவ்வெழுத்து அதிகம்.

[6] ய இலக்ஷ்மண நம்பி பக்கலும் பொன்குடுத்து விலைகொண்டு திருவிளங்1கொயில் பெருமாளுக்கும் பொன்குடுத்து இறை இழித்திக்கொண்ட நிலமும் சபையார் பக்கல் கொண்ட நிலமும் நந்திஎரிப்பட்டியும் மடுப்பூட்டையும் இலக்ஷ்மணநம்பி 2அடைகொண்ட 3நீலமும் மதுசூதன் ஆவியனரையும் 4வ ரு ஷொத்தமன் பட்டியும் ஆக 5முன்றுபட்டி நிலமும் கடிகைக்6கொலால் அளந்து பதினறு சாண்கொலால் 7முவாயிரம் குழிவிலை கொண்டு சபையார்க்கும் 8தெவற்கும் விலைபொன் குடுத்து இறை இழித்தி மணவாளப்பெருமாளுக்கு நிமந்த—

[7] த்துக்கு வைத்தபடியாவது நிமந்தம் நாழுழியாக திருவமுதும் [தின*]நந்தாவிளக்கு ஒன்றும் இர[ண்*]டு சூயன9வஂஹ்ராஹியும் இ[ர*]ண்டு விஷ9வஂஹ்ராஹியும் திருமஞ்சனம் புகுவிப்பதற்கும் புரட்டாதி திருநாள் எழுந்தருளிப் 10பொதுகைக்கு விழாவெழுந்தருளுவிப்பத[ா*] (த†) கவும் சித்திரை முதலாக திருமுளை(ய்†)படி ஒன்பதுநாள் திருவிழாவெழுந்த[ரு*]ளிவிக்கவும்இதனையுஞ் செ[ய்*] விப்பார் திருவெங்கடத்து மாடாபத்தியஞ் செய்வா(ர்†) ரெயாகவும் இந்நிலம் இறைகாத்துவிட சபையார் இரக்ஷிப்பாராகவும் இப்பரிசு வஹ்ராதித்தவரை நிற்பதாக

[8] செய்தென் சத்திவிடங்கனாகிய காடவன் பெருந்தெவியார் பல்லவப்பெற்கடையார் மகள் சாமவையாகிய காடவன் பெருந்

---

1 திருவிளங்கோயில்.

2 இடை.

3 நிலமும்.

4 வருஷோத்தமன் பட்டியும்.

5 மூன்று.

6 கோலால்.

7 மூவாயிரம்.

8 தேவற்கும்.

9 ஸஂஹ்ராஹியும்.

10 போதுகைக்கு.

[*] வரிபிளந்து எழுதப்பட்டன.

(†) இவ்வெழுத்துகள் அதிகப்படி.

*

தெவியென் இத்தன்மம் இரக்ஷிப்பார் ஸ்ரீபாதம் என்தலைமெ
லது ஸ்ரீவைஷ்ணவர்கள் இரக்ஷை இவை சாத்தந்தை எழுத்து—

[III*] ஸ்வஸ்திஸ்ரீ 1கொப்பாதரபன்மற்கு யாண்டு ௰௪ வது
வ தி
சத்திவிடங்கராகிய ஸ்ரீ காடபட்டிகள் பெற்கடையார் மகள் சா
மவையாகிய காடவன் பெருந்தெவி ஸ்ரீ வெங்கடத்து எழுந்தரு
ளிநின்ற பெருமானடிகளுக்கு ௲௨௨-ா ஆஜ்ஞைகொண்டருள வெள்
வ
ளியால் எழுந்தருளிவித்த மண—

[9] வாளப்பெருமாளுக்கு மார்கழித்திருத்துவாதெசிக்கு முன்பு
திருக்கொடி 2 எற்றத்து திருமு [ளை*] அட்டி 3எழுநா [ள*]
திருவிழா இரண்டு பொழுதும் எழுந்தருளுவிப்பதற்கு வைத்
தபூமி வெங்கடக் 4 கொட்டத்து திருக்குடவூர் நாட்டு திருச்சுக
னூர்சபையார்க்கும் 5 தெவர்க்கு [ம்*] பொன் குடுத்து இறை
இழித்தி கொண்டநிலம் வடக்கு 6 ஞெக்கிப்பொன வதியில்
7மெற்கில் ஆயப்பட்டியில் குழி தடிகைக்களத்தில் பதினறுசா
ண்கொலால் குழி ௨௱௲௰எவ௨ ம் குழிப்பட்டிகுழி—

[10] ௲௰௭ ம் பெரும்பாண எதிர்வாயில் குழி ௲௪௰௬ம் நாவிச
ப்பட்டி குழி ௪௲௨௱௨௰௲ ம் குசப்பட்டி குழி ௱௪௰௪௨ ம்புரு
8ஷொத்தமபட்டி குழி ௱௨௰௲ ம் புரு8ஷொத்தமன்பள்ளம்
குழி ௱௬ ம்பஞ்சவன்மாதெவி 9எரிகிழ் நூ† ௲ ம் காலிப்பெரு
மானும் தம்பிபட்டனும் ப[க்*]கல்கொண்டநாதர்செறு நூ† ௨ா
டும் ம் சாலை[பெ*]ருமாள் திருமலை பக்கல் கொண்ட கொட்டுக்

---

1 ௧௦௯-ம் பக்கம் ௰௪-ம் வரியில்காண்க.
2 கொடி எற்றத்து.
3 எழுநாள்.
4 வேங்கடக்கோட்டத்து.
5 தேவர்க்கும்.
6 நோக்கிப்போன.
7 மேற்கில்.
8 புருஷோத்தம
9 எரிகீழ்.
[*] வரிபிளந்து எழுதப்பட்டுள்ளன.
† நிலம் என்பதின்குறி.

கீழ்பட்டி நூ-சாம் ஆக நூ-ச தூளாஎய்சூஹஸ குழியும் திரு1வெங்
கடத்து மாடாபத்தியம் செய்வார்கள் கைக்கொ—

[11] ண்டு சந்த்ராதித்தவரை செல்வதாககுடுத்தொம் சாமவையாகிய
காடவன்பெருந்தெவியென்ப[IV*]ஸ்வஸ்திஸ்ரீ 2கொப்பரகெச
ரிபன்மரான ஸ்ரீராஜெந்த்ரசொழ3தெவற்கு யாண்டுஎழாவதுநாள்
அதிகாரி கொற்றமங்கலமுடையான் செயங்கொண்ட4சொழ
மண்டலத்து பெரும்பாணப்பாடி திரு5வெங்கடகொட்டத்து
குடவூர்நாட்டு தெவர் தெவதானம் திருச்சுகனூரில் நாம்விட்ட
வீட்டிலில் முன்புக்கொட்டிலிலெ இருந்து கொ6யிற்காரிய மாரா
[ய்*]ந்த இடத்து குடவூர் நாட்டு வகை செய்கிற சிறிதனத்து
பணிமகன் கட—

[12] [ம்*] பங்குடையானையும் திருவெங்கட 7 தெவர்கன்மிகளையும்
அழைத்து திருவெ7ங்கடதெவர் நிமந்தப்படி உள்ளனசொல்லுங்
8 கொள்ளென்று வினவின இடத்து இத்தெவர் 9 தெவதானம்
திருமுண்டியத்து ஸபையார் பலகல் வெட்டினபடி பொன்
கைக்கொண்டு கற்பூரவிளக்கு ஒன்று உட்படக(ட்†)டவ திரு
நுந்தா விளக்கு உக இவையிற்றுள் இவர்கள் எரித்து வரும்
திருவிளக்கு உ நிக்கி10 இத்திருமுண்டியம் குடிபற்றுமையில்
திருச்சுகனூரில் அகப்ப—

---

1 திருவேங்கடத்து.
2 கோப்பரகேசரிபன்மரான.
3 தேவற்கு.
4 சோழ.
5 திருவேங்கடக்கோட்டத்து.
6 கோயிற்.
7 திருவேங்கடதேவர்.
8 சொல்லுங்கோள்.
9 இத்தேவர் தேவ தானம்.
10 நீக்கி.
[*] வரிபிளந்து எழுதப்பட்டுள்ளன.
(†) இவ்வெழுத்து அதிகப்படி.

[13] ட்ட முதலுக்கு உடைய பொன் உ௰ ~ம் இவர்கள் இத்தெவர்க்கு பரிசாறகம் செய்து தெவர் பண்டாரத்தில் உடை[ய*] பொன் ௫ ~ம் ஆக பொன் உ௰௫ ~ம்இவர்கள் கடவர்கள் கன்மிகளுக்கு முட்டாமல் நித்தப்படி1 யொமெ கூட எண்ணைசட்டி திருமலைக்கு 2எற்றி எரிப்பிக[க*] கடவர்களாக நிமந்தம் செய்களென்று அதிகாரி கொற்றமங்கல முடையான் சொல்ல இப்பரிசு திருமுண்டியத்து ஸமெஹயார் கடவ திருனந்தா விளக்குக்கும் இவர்கள் உடைய பொன்—

[14] உ௰௫ ~ம் இத்3தெவர்பண்டாரத்துக்கு முதலாக்கிக்கொண்டு இத்தெ3[வர்பண்டார*] த்து [க்கு*] திருமலைக்கு 4எற்றி திருனந்தா விளக்கும் கற்பூர விளக்கு ஒன்று உள்பட திருவிளக்கு திருவெங்கட5 தெவர்க்கு ஸ்ரீகாரியம் செய்வாரும் தெவ6 கன்மிகளுமெ சஙூராதித்தவரை எரிப்பதாக நிவந்தம் செய்தது ஸ்ரீ 7வெஷைவர்களொமெ

ண

---

1 நித்தப்படியோமே.

2 எற்றி.

3 இத்தேவர்.

4 எற்றி.

5 திருவேங்கடதேவர்க்கு.

6 தேவகன்மிகளுமே.

7 ஸ்ரீவைஷ்ணவர்களோம்.

[*] வரிபிளந்து எழுதப்பட்டன

பிராசீனதர்மங்களின் உயர்வும் இக்கால ஆசாரங்களும்.

முதல் உபந்நியாசம்.

(சுமி-ம் பக்கத்தொடர்ச்சி.)

இந்தக் கல்விவிஷயத்தில் இன்னும் சில சமாசாரங்கள் நான் சொல்லவேண்டியிருக்கின்றன. அவைகளைச்சிரத்தையாயுங் கவனமாயுங் கேளுங்கள். பழைய சாஸ்திரங்களைப் படிக்கிறதினால் நான் தெரிந்தவிஷயம் யாதெனில் முற்காலத்தில் படிக்கின்ற சிறுவர்கள் எப்போதும் பிரஹ்மசரிய விரதத்தைக் கைக்கொண்டுவந்தார்கள். ஒவ்வொரு மாணுக்கரும் விவாகமின்றிப் படிப்புமுடியும்வரை கிரகஸ்த ஆசிரமத்தையடையாமலிருந்திருக்கிறார்கள். 36, 18, 9 வருஷங்கள் மாணுக்கராகக் கல்வி கற்றுக்கொண்டு வரவேண்டியகாலம். இக்காலம் முடியும்வரை விவாகமில்லாத நோன்பையே கைக்கொண்டு மாணுக்கரொழுகக்கடவர். கிரகஸ்தனுகு முன்னரே, முற்காலத்தில் போர்வீரராவார்கள். அந்த ஆதி உயர்வான ஆசரணை யிக்காலத்தில் என்னமாகவாயிற்று? இக்காலத்திய பாடசாலையிற் கற்கும் மாணுக்கர்கள் குழந்தைகளைப்பெற்றிருக்கிறார்கள். கலாசாலை புகு முன்னமேயே மாணுக்கர்கள் மக்கட்பேறு பெற்றிருக்கிறார்கள்; அதாவது, அவர்களே குழந்தைகள்! அவர்களுக்குக் குழந்தைகளுண்டாயிருக்கின்றன. இத்தன்மையானது, ஆதி உயர்வான தர்மங்களுக்கு முற்றும் விருத்தமானது. இது இந்தியாவிற்கு க்ஷீணத்தைப் பயக்கத்தக்கது. இதனால் கிடைக்கிறதென்னவென்றால், கலாசாலைப் படிப்புமுடிய பூர்ணசக்தியும் வீரியமுமுள்ளவராக விருக்கவேண்டிய மாணுக்கர், சரீரபலம் குன்றி நாடி நரம்புகள் தளர்ந்து மூளை நைந்துபோய் நடைப்பிணம்போலிருக்கிறார். இக்காலத்துப் படிப்போ சரீரவறட்சியையுண்டுபண்ணத்தக்கது. கிரகஸ்தாசிரம தர்மத்தையும், மக்கட்பேறு முதலிய உத்தரவாதத்தையும் வகிக்கிறதினால் இன்னுமதிக க்ஷீணகதி ஏற்படுகின்றது. என் சகோதரர்காள்! இது

சரியன்று. இது இந்தியாவின் நாசத்திற்குரிய வழி. யௌவனதிசையிலிருக்கவேண்டியவர்கள் வார்த்திகத்தையடைகிறார்கள். இருக்கவேண்டியபடி நீங்களில்லையென்று அறியவில்லையா? அளவுக்குமீறிய பாரத்தை மூளை வகிக்கமாட்டாதென்று நீங்களறியவில்லையா? இந்தியர்கள் ஆகிருதி வரவரக்குறைவுபடுகிறதை நீங்கள்கவனிக்கவில்லையா? பால்லிய விவாகத்தினால் ஆகிருதி வரவர க்ஷீணமாகிக்கொண்டுவருகிறது. இந்தியாவின் சிலநாடுகளில், தொட்டிற் குழந்தைகளுக்கு விவாகஞ்செய்கின்றார்களாம். இதனால் பால்லியத்திலேயே மக்கட்பேறு ஏற்படுகிறது. பிராசீனதர்மசாஸ்திரிகள் மூலமாய், தேவர்கள் இந்தியாவுக்கு வுபதேசித்த தர்மங்களின் முறைப்படியாகவா இப்போது இந்தியர் ஒழுகுவாராகின்றார்கள்?

இவ்வினாவுக்கு மறுமொழியுங்களாற்றான் முடியவேணும்; இது விஷயத்தில் சிரமமிருக்கிறதென்று நன்றாய் நாமறிவோம். முன்தர்மப்படி யனுஷ்டிக்க ஒருவன் தைரியமாய் முயன்றால், தம்முடைய மனசிலப்படிச்செய்ய விரும்புகிறவர்களுங்கூட தைரியமின்றி வெளியிலே கோபித்துக் குற்றஞ்சொல்ல அனேகர்கள் கிளம்புகிறார்கள். "தாங்கள் சொல்லுகிறபடிசெய்தல் நலம், அவசியம்" என்று என்னிடமெத்தனை பிதாக்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆனாலதையனுஷ்டிக்கவும், அதனாலுண்டாகும் நிந்தையை லக்ஷியம் பண்ணாமலிருக்கவும் எத்தனைபேருக்குத்தைரியமுண்டு. இவ்விதமான தைரியத்தினாற்றான்பெரியகாரியங்களை நடத்தமுடியும். தேசம் விமோசனம் பெறும். கோழைத்தனத்தினால் கீழானஸ்திதிக்குவந்துவிட்டோம். இனி, மேலானஸ்திதிக் கேறவேண்டுமானால் தைரியத்தினாற்றானமையும். அறிவின்மையாலிழிவான நிலைமையிலிருக்கின்றோம். கல்விப்பயிற்சியினாலும், பிராசீனவுயர்வான தர்மங்களைத்திரும்பக்கைக்கொள்வதினாலும், நாம் மேம்பாட்டைப்பெறவேண்டும். பிராசீனதர்மமுறைகளுக்கே விரோதமாக நடக்கமாட்டோம், மனசுக்கு விரோதமுஞ் சரீரதர்மத்திற்குத் தீங்குவிளைவிக்கிறதுமான வழக்கத்தையனுஷ்டிக்க மாட்டோம் என்று, உங்களிற்சிலரேனுஞ் சொல்லத் தைரியமுள்ளவர்களாகி, எவர் ஆக்ஷேபணையுங் கவனியாமல் விவாககாலத்தைக் கொஞ்சந் தாமதிக்கச் செய்வீர்களேயாமாகில்,

விரியமுள்ளவும், பலமுள்ளவுமான ஜாதியா ருற்பவிக்க ஹேதுவான அங்குரார்ப்பணஞ் செய்தவர்களாவீர்கள். ஏனையர் போதிக்கிறபடி பிராசீன வழக்கங்களை விட்டுவிடுங்களென்றும், நவீன வழக்கங்களை யனுஷ்டியுங்களென்றும் நான்சொல்லவரவில்லை. பிராசீன வழக்கங்களைத் திரும்பவனுஷ்டியுங்களென்று சொல்லுகிறேன். அதற்கப்படியாக, பெண்களுக்கு விவாகம் 14-வது வயதிலும், சிறுவர்களுக்கு விவாகம் 18-வது வயதிலுஞ் செய்யவேண்டுமென்றும், ருதுசாந்தியதற்கு 2-வருஷ கிரமித்ததின்மேலிருக்கலாமென்றுஞ் சொல்லுவேன். இந்தவிதி யனுஷ்டானம்பெறின் ஜாதிவீரியத்ததாகவாருமென்று நீங்களே சீக்கிரத்திலுணர்வீர்கள். எந்தப்பாடசாலையிலுங் கலாசாலையிலு மிந்தவிதி யனுஷ்டானத்திற்கு வருமென்று நம்புகிறேன். உடனேயே பிராசீன வொழுக்கத்தைக் கைக்கொள்ளமுடியுமென்று நாமெண்ணவில்லை. ஆனாலதை நோக்கியே வரவர மேன்மேலும் முயற்சித்துக்கொண்டுவரக் கூடுமென்று நம்புகிறேன். இதை உதாரணமாக மற்றவர்களும் பார்த்து அனுஷ்டிக்கத்துணிவார்கள். இவ்விதமாக இந்தியர்களுக்குச் சரீரதாருட்டியமேற்பட்டு வீரியமுள்ள தீரர்களுண்டாகலாமென்று நினைக்கிறோம்.

பிரஹ்மசரியமானதின்மே லென்னபருவத்தை யடைந்தவனாய்க் கிரகஸ்த ஆசிரமத்திற்பிரவேசிக்க வேண்டியவனாக விருக்கிறான்? இந்த வாசிரமமானது சீலத்தை விருத்திபண்ணுகிறதி லதிக முக்கியமானதென்று நீங்கள்தெரிந்துகொள்ளலாம். இந்த ஆசிரமத்தின்கண் பிறர் க்ஷேமம் கருதல், மிதமாகவிருத்தல், தம்மின்மெலியாரிடமன்பு பாராட்டி யுதவிபுரிதல், இலகுவாய்த் தியாகஞ் செய்யப் பயிலுதல் அதாவது, அன்புபாராட்ட அதின் பிரயோஜனமாக அன்பு பயத்தல் முதலிய கற்பனைகளையடைய இவை சாதகமாகவிருக்கின்றன. உலகத்தின்கண் பரிசுத்தமானமனோபாவங்களின்முதன்மையானதும் ஆத்மா ஈசுவரனிடம் வைக்குமன்புக்கடுத்தபடியானதுமான ஸ்திரீ புமான்களின் பரஸ்பர அன்புநிகழ்ச்சியும், பிதா தன்மக்களிடமும் மக்கள் பிதாவினிடமும் பாராட்டுமன்பும், முன்னதிலாதரவும் பின்னதில் நன்றியும் மரியாதையு மிவைகளெல்லாஞ் சீவன்கிரகஸ்தாசிரமமடையாநிலையிற் படிப்பினைகளாம். இந்த ஆசிரமம் மற்றைய ஆசி

ரமங்களுக்குற்ற துணையாம். "இல்வாழ்வா னென்பா னியல்புடைய மூவர்க்கும், நல்லாற்றின் நின்ற துணை." மேலும் பற்றுள்ளவிடத்தில் பற்றற்று இருக்கப்பழகவும், எல்லாப்போக சம்பத்துக்களும்உள்ளவிடத்து ஜிதேந்திரியனுகவிருக்கவும்இல்லறமனுகூலமானது. பிராசீன உயர்வான வொழுக்கமிருக்கலாம்; அது நடைபெற்றுப் பிரகாசிக்கவேண்டுமானுலெவ்வளவு மாறுத லிக்காலத்திய வழக்கத்திற் செய்யற்பாலதாகவிருக்கிறது. இந்த விஷயத்தைப்பற்றி விஸ்தாரமாயினி இந்திய ஸ்திரீகளைப்பற்றிப் பேசும்போது வசனிப்பேன். இந்தியாவின் விவாகதர்மத்தி னுயர்வுக்குச் சமானமானது எங்குமில்லை. ஆனுல் அந்த வுயர்வான தர்மம் இக்காலத்தி லனுஷ்டானத்தில் துர்லபமாகவிருக்கிறது.

பிதா, மக்கள் இவர்களுடைய பரஸ்பர வொழுக்கங்களைக் கவனியுங்கள். அவைகளிருக்கவேண்டிய முறைப்படி யிக்காலத்தி லிந்தியாவிலிருக்கின்றனவா? பிதா சௌஜன்னியமின்றியும் மக்கள் கூச்சமும், அச்சமுமுள்ளவர்களாகவுமிருக்கின்ருர்களல்லவா? இருவருடைய வொழுக்கத்தினுலும் மகன் பிதாவிடம் அந்தரங்கமில்லாதவனுக விருக்கின்ருனல்லவா? மகன் சந்தோஷமாகவு முல்லாசமாகவு மிருக்கவேண்டி, கிரகம் சுகமாகவும், பிரீதிகரமாகவு மிருக்கும்படி பிதா செய்விக்கிருனு? மகனின் வேண்டுகோள்களைக் கருதாமலும், பாலியனுயிருக்கின்றமையால் அவனுற்சாகங்களைக் கவனியாமலும், தகப்பன்மார் தங்கள் காரியங்களைப்பார்த்துக்கொண்டு உள்ளடங்கினவர்களாகவும் ஆலஸ்யமுள்ளவர்களாகவும் இருக்கின்ருர்களல்லவா? என்னபரிதாபம்! அந்தோ! மகன், தகப்பனிடஞ்சொல்ல அச்சமுள்ளவனுக தீயவைபற்றிய வுல்லாசங்களில் காலங்கழிக்கச்செல்லுகின்ருன். தகப்பன்மார் அன்பும் ஆதரவுமுள்ளவர்களாகில் நல்லவைபற்றிய வுல்லாசங்களில் மகன் நேர்மையாக வொழுகுவானன்றே? அந்தோ என்ன பாவம்! தகப்பன்மார் மக்களிடத்தில் அன்பும் சிநேகமும்பாராட்டாமலும், பக்ஷம்வெளிப்படப்பாராட்டாமல் அதிகாரம் பாராட்டிக்கொண்டும் இருக்கிறதினுல், இந்திய வாலிபர்கள் நீதிமுறைதப்பி பதட்டமுள்ள துன்மார்க்கர்களாகின்ருர்கள். வாலிபகாலத்தில் மக்களிடம் பக்ஷமும் இன்சொல்லும் ஆதரவான வொழுக்க

மும், தகப்பன்மார் அமைந்து நடைபெறவேண்டும். தங்களுக்குத் தங்கள்கிரகஞ் சுகமில்லையென்றும், அருவருப்புற்றதாக இருக்கிறதென்றும், அதைவிட்டு விலகவேண்டுமென்றும் சிறுவர்கள் சிலவேளைகளில் என்னிடஞ்சொல்லிக்கொள்ளுவார்கள். அதனுற்ருன் நான் இவ்வண்ணஞ்சொல்லுகிறேன். இரக்கமின்றி அதிகக்குரூரமாக அதிகாரஞ்செலுத்துவதினுல் இந்தியகிரகத்தில் அதை யெதிர்க்க இடமுண்டாகிறது. எப்போது மகனெதிர்க்க வெத்தனித்தானே அப்போது அநேகமாகக் குற்றவாளி தகப்பனே. பாலியாவஸ்தைக்குரிய மகனுடைய மனேபாவங்களையும் மனேரதங்களையும் உதறித்தள்ளி அன்பின்றித் தகப்பன் நடைபெறுகின்றதினுல், சிறுவனும் எதிர்க்க ஆரம்பிக்கின்ருன். இந்த எதிர்க்கும் சுபாவமானது அனேகமாக வெளியாகாமல் பொருமிக்கொண்டேயிருக்கும். அதுவும் அபாயகரமானதுதான். மகனுக்குத் தகப்பன் உற்ற அந்தரங்க சிநேகனுக இருத்தல்வேண்டும். அன்பும் ஆதரவுமுள்ளவனுக இருத்தல் வேண்டும். பிரியமுள்ள ஆலோசனை சொல்லுகிறவனுக இருத்தல் வேண்டும். இப்படித் தகப்பன்மார் இருப்பார்களாகில் மகன் எதிர்பேசாமல் வணக்கமும் மரியாதையுமுள்ளவனுகவிருப்பான். கிரகத்தில் ஏதேனுஞ்சங்கடம்நேரிடுமாகில் அதற்குக்காரணம் மூத்தோரே; வாலிபரன்று. சம்பந்தநேர்மையில் பங்கமுண்டானுல் குற்றம் மேலாயினேரிடமிருக்கும், கீழாயினேரிடமிராது. மேலோர் அவர் கடமையில் வழுவ மேவியோரும் அவ்விதம் ஆரம்பிக்கின்ருர்கள்.

இது ஒவ்வொருவருந் தமக்குத்தாமே யோசித்து நடத்திக்கொள்ளவேண்டியவிஷயம். உயர்வான தர்மமென்னவென்ருல் தந்தை, மகனுக்குற்ற நண்பனுகியும் மகன் தந்தைக்குற்ற அன்புள்ள தோழனுகியும் இருத்தல்வேண்டும். ஒவ்வொருவரும் இந்தத்தர்மம் எவ்விதமிக்காலத்தில் அவரவர் கிரகத்தில் நடைபெறுகிறதென்று கவனித்துப்பார்க்கவேண்டும். அறிவீனமான நடத்தை அல்லது தவருனவொழுக்கம் மகனிடம்நேர்ந்தால் தகப்பன் அன்பாகவும் ஆதரவாகவுமொழுகுவானுகில், அவைகள் நீங்கி மகன் நேர்மைபற்றி யொழுகுவான். இல்வாழ்க்கைநேர்மையாய் அமையும். உலகத்திலெல்லாக்கிருத்தியங்களு மொழுங்காய் நடைபெறும். பிராசீன கிரகஸ்ததர்மங்கள் எங்கு

மனுஷ்டானத்திற்கு வரும். அவை நடைபெறவே இந்த ஆசிரம முடிவில் அடுத்த ஆசிரமமாகிய உலகவியாபாரங்குறைந்து தியானபரனுகவிருக்கிறநிலையையனுஷ்டிக்கிறது இலகுவாயிருக்கும். இத்தகையதான வானப்பிரஸ்தவாசிரமத்தை இக்காலத்திற்குத் தக்கபடி யெவ்வாறு மாற்றிக் கைக்கொள்ளலாம். பிற்காலத்தில் ஏகாந்த காலக்ஷேபஞ் செய்யவேண்டிக் காட்டகத்தே செல்லுதலும் குகையில்வாசஞ்செய்தலும் இக்காலத்திற்குப் பொருந்தாதவிஷயம். இந்த ஆசிரம தர்மத்தை உள்ளபடியாதரிப்பது இக்காலத்திய நாகரீகத்தின்நெறிக்கு முற்றும்புறம்பாகவிருக்கிறது. இக்காலத்தில் ஜனங்கள் தங்களுடைய தேவைகளைப் பலவாறுக விருத்திசெய்துகொண்டிருக்கின்றார்கள். மூத்தோர்கள்திரவியஆர்ஜிதவியாபாரத்தைவிடவும், கிரககிருத்தியவிசாரணையைவிடவும், உலககாரியங்களில் நேரில்தலையிடாமல்விடவும், இளைஞர்களிவைகளில் பிரவர்த்திக்கும்படி செய்யவுங்கூடுமல்லவா? நிவிர்த்திமார்க்கத்தில் பிரவேசிக்கக்கூடாதா? கௌரவமான ஏகாந்தநிலையை ஒருவாறு அனுஷ்டித்து, உபாசனை தியானம் ஆத்மவிசாரணை முதலியன செய்துகொண்டும் உலக அனுபவங்கள் நிறைந்தவர்களாகையாலும் உலகப்பற்று இல்லாமையாலும் நிற்பக்ஷபாதமாய் நடுநிலைமையாய் வேண்டுங் காலங்களில் இளைஞர்களுக்குப் புத்திமதிபோதித்தும், அவர்கள் காலங்கழித்தல் சாதகமாகவிருக்கும். விருத்தர்கள் இவ்வண்ணம் உலகவியாபாரங்களினின்றொழிவடைந்தும் இளைஞர்களுக்கு ஆலோசனை சொல்லிக்கொண்டும் அவர்களை நல்லவழியில் நடப்பிவித்தும், அனுபவங்கள் நிறைந்தவர்களாயும், ஞானவான்களாயுமிருக்கின்றமையால், பூஜ்ஜிதர்களாகவும் நம்பிக்கைக்குப்பாத்திரவான்களாகவும் அமைந்தொழுகவேண்டும். இம்மாதிரியாக இந்த ஆசிரமமானது திரும்பவும்நடைபெறுமாகில் வெகு அனுகூலமாக விருக்குமல்லவா?

கடைசி ஆசிரமமான சந்நியாசம், உயர்வான ஞானப்பயிற்சியுள்ளதாக இருக்கவேண்டியதாகையால், சொற்பப்பெயர்கள்தான் அந்த ஆசிரமத்தை யனுஷ்டிக்கக்கூடும். இக்காலத்தில் அது துர்லபமாக இருப்பினுஞ் சிலதலைமுறைகளானபின்னர் ஏனைய ஆசிரமங்கள்சீர்திருத்தப்பெற்று ஜனங்கள் சீலமும் ஞானபாவமும் மேன்மையாக அடையும்போது இந்த ஆசிரமங்களுமேற்பட இடமுண்டாகும்.

சந்நியாசி என்றசொல் இக்காலத்தில் வெகு சாதாரணமாய்
வழங்குகிறது. ஞானமார்க்கம்பயில கிரகஸ்தாசிரமம் அதிக முக்
கியமான சாதனம். அதைவிட்டு விலக அனேகமாக அருகர்கள்
ஒருவருமில்லை என்று சொல்லலாகும், இந்திய ஞானிகள் கிரகஸ்
தாசிரமம்எல்லோரும் பற்றி யொழுகக்கடவர்களென்று ஆலோசனை
யின்மேல் விதித்திருக்கின்றார்கள். விருத்தர்களுக்குங்கூட சந்நியா
சத்தை யுள்ளபடி அனுஷ்டிக்கமுடியாதாம். பால்லியத்தில் அதை
யனுஷ்டிப்பது மிகத்துர்லபமாம்.

பாலயோகியாய், மாசற்ற ஞானியான சனத்குமாரர்போன்று
நடைபெற்றால், சிரேயஸ்கரந்தான். அந்த ஆசிரம வுயர்வும் நன்கு
விளங்கும். உலகரக்ஷணார்த்தம் ஒருமஹான் அவதரிப்பாராகில், அவர்
குழந்தைப் பருவமுதற்கொண்டே சந்நியாச மார்க்கத்தைப்பற்றி
யொழுகக்கூடும். ஆனால் இக்காலத்திலோ, அனேக இளைஞர்களும்
யௌவனர்களும் இந்தஆசிரமத்தின்கண் வெளிப்படையாய்த் தன்னி
ஷ்டமும், உலகநிர்ப்பந்தங்களுத்திரவாதங்களின்மையும், அமைவுற்
றிருக்கிறதைக்கண்டு, இந்த ஆசிரமத்தின் அதிக சிரமமான வுத்திர
வாத பாரங்களைத்தாங்கி நடத்த எண்ணமில்லாதவர்களாய் இலகு
வாயும் பதட்டமாயும் காஷாயந்தரிக்கின்றார்கள். தேகக்கொழுப்புந்
தேகதாருட்டியமுமுள்ளவர்களான சோம்பேறிகள் பிறர் ஆர்ஜிதங்க
ளைப்பக்ஷித்துக்கொண்டும் யாருக்குமெவ்விதபிரயோசனமுமின்றியும்
இத்தேசத்தில் ஆயிரக்கணக்காய்த் திரிகின்றார்கள். அனேகர் காஷா
யத்தின் கௌரவத்தைக்கொண்டு வேஷதாரிகளாய், காமிகளாய் துர்
மார்க்கத்தில் பிறர்களை நடத்தி, பேரின்பநெறி முற்றுந்துறந்து சிற்றி
ன்பத்தில் முழுமையும் மூழ்கி ஜிதேந்திரியர்களாக இருக்கவேண்டிய
முறைதவறி இந்திரியாதிபர்களாக அலைகின்றார்கள். உண்மையான
சந்நியாசி அருமை பெருமை தங்கியவரே. எளியவன்கூட தன்பாலு
ள்ளசிற்றுண்டியையும்அவருக்கிட்டுத்தான்சந்தோஷிப்பான். அவரு
டைய ஞானசிரேயஸானது, அவருக்குவேண்டிய அற்பவிஷயத்தைக்
காட்டிலும் எவ்வளவோ கோடிபங்கு அதிகமானது. அவர் தூய்மை
யும் பக்தியும், அவர்போகுமிடமெல்லாஞ் சுத்தப்படுத்தும்; சிரேயஸ்
கரத்தைக்கொடுத்து சீலங்கெட்டுப்போகாமல் பாதுகாக்கும். துர்நட

த்தையுந் தீயவொழுக்கங்களுமுள்ள போலி சந்நியாசிகள், ஈசுவரனு க்கும் மனுஷனுக்கும் சம்மதமல்லாதவர்களாய், இந்தவுயர்வானஆசிர மத்திற்குப்பழிப்பும் ஹானியுமுண்டுபண்ணி, சந்நியாசியென்ற பெய ருக்கே அகௌரவத்தையுண்டாக்குகிறார்கள். பாலியர்களுக்கு உத் திரவாதங்கள் கடமைகள் நிறைந்த கிரகஸ்த ஆசிரமமே தகுந்தது. இவ்வுத்திரவாதங்களால் தம்மையடக்கப்பயின்று, தம்முடைய கீழா ன நடைப்போக்குகளைக் கட்டுப்படுத்தி நிக்கிரகஞ்செய்து, பின்னர் தனக்கும் உலகத்திற்கும் யாதொரு தீங்குஞ்செய்ய விடாமில்லாமல் நிகழுவான்.

பிராசீன உயர்வானதர்மங்கள் இக்காலகதிக்குரியவாறு அமை க்கப்பெற்று, இந்தியாவில்இக்காலத்திலனுஷ்டானத்திற்கு வருமேயா கில், அதைப்பார்த்து ஏனையதேசத்தார்களு மனுஷ்டிக்கத்தலைப்படு வார்கள். பின்பு உலகமுழுதும் மாறி இவ்வொழுக்கங்களையனுசரி த்து ஒழுகாநிற்கும். மேல்நாடுகளில் வாலிபர்கள் வரவரப் பரிசுத்தர் களாக விருக்கும்படிசெய்ய முயல்வோம். தற்கால நாகரீகத்தின் லக்ஷணமான தனக்குத்தனக்கு என்ற போட்டித்தன்மையைத்தவி ர்த்துக் கிரகஸ்தர்கள் பிறர் க்ஷேமத்தைக்கருதுபவராயும், செந்தண் மைபூண்டவர்களாயும் ஒழுகும்படி வரவரச்செய்யவேண்டும். விரு த்தர்கள் திரவிய ஆர்ஜிதத்தொழிலை யொழித்துக் குடும்பங்களுக்கு அறிவு போதிப்பவர்களாக நடைபெறுவதையும், அவர்களில் சிறு பான்மையரேனு முலகவாழ்க்கை முற்றுந்துறந்தவராயிருப்பதையும் நாம் பார்க்கவேண்டும். இந்த உயர்வான தர்மநெறிகள் வேரூன்றப் பெற்றதும், அவைகளின் வாசனை கெடாமலிருப்பதும், அவைகளை இன்னுஞ் சிரத்தையுடனே சிந்தனைசெய்கிற ஜனங்களையுடையதுமான இந்தத் தேசத்திலேயே மறுபடியும் ஸ்தாபிப்பது உலகத்திற்கு நன் மையைப் பயக்குமன்றோ? மனிதனின் ஒவ்வோரியல்பும் நேர்மையாய் விகாசித்து, ஜனங்களின் யோகக்ஷேமார்த்தமாக யாவரும் பார்த்துக் கற்று அவ்வழியில் நிற்க, இந்தியாவானது பிரத்தியக்ஷ அனுபவசித் தமான உதாரணமாகவிருக்குமல்லவா?

சாயங்காலங்களில் கொடுக்கிறதாக வுத்தேசித்திருக்கிற இவ் வுபந்நியாசங்களில் இதுதான்முதன்மையானது. நான்சொன்ன விஷ

யத்தை மனதிற்பதியச்செய்யுங்கள். தாங்கள் தினந்தோறும் நடத்
தும் ஒழுக்கங்களை நன்றாய்க்கவனியுங்கள். அவைகளில்குற்றங்குறை
யுள்ளவைகளைப்பாருங்கள். அதன்மேல்அவைகளுக்குரியபிராசீனதர்
மங்களைத் திரும்பவும்நாட்டிச் சாவதானமாய் அம்முறையில் நடை
பெறுங்கள். மனதில் தோன்றியவுடனேயே அனுஷ்டானத்திற்குக்
கொண்டுவரவேண்டாம். நன்றாய்ப்பலவாறாக யோஜியுங்கள். அதன்
பிறகு அனுஷ்டியுங்கள். எண்ணியெண்ணிக் கனாக்காணவேண்டாம்.
இந்தியா க்ஷேமத்திற்கும்வரும்; அப்படி நம்பிக்கை எனக்கிருக்கிறது'
என்று வார்த்தைமாத்திரத்தில் நிற்கவேண்டாம். அடியிற்கண்டவா
று செய்யக்கடவீர்கள். ஈசுவர அனுக்கிரகங்களினால் நாமே இந்தி
யாவின் க்ஷேமகரமான இந்நெறிகளை யவலம்பித்து இம்முறைகளை
அனுஷ்டிப்போம். இந்த வாலிபர்களே இனி இந்தியர்களாகிறவர்
கள். இவர்களுக்குஉரித்தான முறைப்படி கல்விகற்பிக்கக்கடவோம்.
பிராசீன வுயர்வான மனோபாவங்களை இவர்களுக்குப் புகட்டுவோம்.
அவர்கள் நேர்மையுள்ள கிரகஸ்தஆசிரமிகளாக ஆவார்கள். நேர்
மையுள்ள கணவர்களாகவும், தந்தையாராகவுமிருக்கவேண்டிய மு
றைகளையுடையராய்ப் பிறருக்கு உதாரணமாகவு மிருப்பார்கள்.
எது சொன்னாலும் வாங்கக்கூடிய இளமைப்பிராயத்திலேயே, விருத்
தர்கள் எல்லாராலும் நன்குமதிக்கப்பட்டவர்களாய்ப் பூஜ்ஜியதைய
டையக்கூடிய நெறியை, பாலியர்களுக்கு எடுத்துக்காட்டுவோம்.
கூடியவரை நாங்களே அந்நெறியை அனுஷ்டித்துக் காட்டுவோம்.
அது அவ்வளவு முற்றும் நேர்மையாகவில்லாவிடினும், இனி அவர்
கள்காலத்தில் அதைச் சீர்திருத்திக்கொள்ளுவார்கள். அதிக சௌ
கரியங்களேற்பட எங்களைவிட மேன்மையாய் நடைபெறுவார்கள்.
அவர்களுக்கடுத்த தலைமுறையில் வருகிறவர்கள் இன்னுமதிக மேம்
பாட்டைப்பெற்று ஒழுகுவார்கள். இவ்விதமாக வரவர சிரேயஸ்க
ரம் விருத்தியடைய சந்ததிக்கிரமமாய் மென்மேலுமுயர்வான தர்மங்
கிரீடித்துக்கொண்டுவரும். இந்தியா புதியஸ்வரூபம்பெறுவதாகும்
ஆனால் இதற்கெல்லாம் அஸ்திவாரம் அன்றுசெய்வாம் என்று எண்
ணாது, இன்றே தாமசியாமற்போடக்கடவோம். இதனால் எவ்வளவு
செலவு நேர்ந்தாலும் அதைக்கவனியாது செய்துமுடிப்பிப்போம்.
நாம் அஸ்திவாரம் போடுவோம். இனி வருபவர்களான பாலர்கள்

அதிற் சுவரெழுப்புவார்கள். அவர்கள் பிள்ளைகள் அதன்மேற் கட்டிடங்கட்டுவார்கள். இப்படியே மேன்மேலும் விர்த்தியடையும். இந்தியா சுத்தமாயும், மேன்மையாயும் ஞானமுறையுள்ளதாயும் அமைந்தொழுகுவதாகும்.

இத்தன்மையான இந்தியாதேசந்தான், உலகமெல்லாவற்றிற்கும் ஞானகுருவாகவமையும். ஜனசமூகத்திற்கே இந்தியர்கள் பிராஹ்மணராவார்கள். அவர்சள் வாக்குந்தேவவாக்காக விளங்கும். அனுக்கிரகம் அமைந்ததாக நிகழும். அப்படிப்பட்ட வுயர்வான ஸ்திதிபபக்குமாறு, அஸ்திவாரப்போட உங்களை வேண்டுகிறேன். உயர்வான கட்டிடங்கள் ஸ்தாயியாக நிலைபெறுமாறு பலமான அஸ்திவாரம் போடுங்கள். இனிப் பின்வருமவர் அதன்மேல் ஆலயங் கட்டுவார்கள்.

பௌத்தமத விசாரணை.*

ஐரோப்பிய அறிஞர்களின் நன்முயற்சியாலே, பௌத்தமதத்தைப்பற்றிய நூல்கள் எந்த (ஓரியண்டல்) கீழ்நாட்டைப்பற்றிய புஸ்தகசாலையிலும் பெருமிதம் நிறைந்திருக்கின்றன. தற்காலம், ஐரோப்பா அமெரிக்கா கண்டங்களிலும் இந்தியாவிலும், இந்த பௌத்தமதம்போல் எந்தமதமும் எழுதப்படிக்கப்பட்டதில்லை. ஐரோப்பியர்களில் சுத்தலோகாயதத்தினின்று மீண்டும், மேலொரு வாழ்வுண்டு, கடவுளுண்டு என்றும் உறுதிபிறக்காதவர்களாயும் ஏதோ ஒரு அழகிய சொப்பனத்தில் விழைவுற்றவர்களாகவுமுள்ள அநேகர் இதனை அவலம்பித்துப் பாராட்டி வருகிறார்கள். "நாம் ஆன்மாபரமான்மாவில் நம்பமாட்டோம். முற்றறிவுடைய மனிதனில் நம்புவோம். நாம் அடையும் பேறு மூற்றறிவுடைமையே." இம்மதம் ஐரோப்பியதேசத்தில் ஓர் வேறுபாடுடைத்து: ஏனெனில், கௌதமருடையவும், ஐரோப்பியருடையவும் புருஷார்த்தம் அல்

---

* ஸ்ரீ சிவஞானசித்தியார் ஆங்கிலேய மொழிபெயர்ப்பு உரையினின்றும் மொழிபெயர்த்தது.

லது பெறும் பேறுகளில் வேற்றுமையுடைமையால். என்னெனில், கௌதமருடைய தேசத்தினர் என்றும் உயிரைப் பளுவாகவும், "எல்லாம் துன்பம் துன்பம்" என்று எண்ணி, எந்நாள் இந்தப் பிறப்பிறப்பைத் துடைத்துவிடலாமோ என்று ஏங்கிநிற்பவர்கள். ஐரோப்பியரோவென்றால், எவ்விதத்திலும் தினையளவேனும் இன்பம் கிடைக்கப்பெறாதாயின் அவ்வாழ்வு வாழத்தக்கதில்லையென்று கொள்வர். மேல் அவன் முழுமுயற்சியும் இவ்வுலகஇன்பத்தை முற்றும் தேடிச் சேகரிப்பதில்தான். ஆகையால்தான், மாக்ஸ்நார்டோ பண்டிதர், உலகம், பொய்யைத்துறந்து சுத்தமான ஊண் உடை, பாடல் ஆடல் முதலியவைகளினால் எவ்வளவு சுகம் பெறலாமோ அவ்வளவும் பெறவேண்டும்; என்னும் மானிடசுவிசேஷத்தைப்பிரசங்கிக்கக்காண்கிறோம். இம்மதம், நம்பூர்விக சார்வாகப் பௌத்தத்தின் நவீனத்திரிபென்றே சொல்லவேண்டும். இதனால் நம்மாசிரியர்களால் சாருவாகத்துக்குப்பின் பௌத்தத்தைவைத்த முறைமையும் பெறப்படும். இம்முறை காலத்தானன்று. மனிதனின் குணதத்வாதியபிவிருத்தியின்பாற்று. இங்கே ஒன்றுஅவசியம் கவனிக்கவேண்டும். பழையனபுதியனவுமாகிய நம்நூல்கள், சென்றகால நிகழ்கால வர்த்தமானங்களை நிர்ணயமாகக் குறிக்காமற்போனபோதிலும் மற்றெந்த சாதியாரின் சரித்திரங்களும் குறிக்காதொழிந்த தனித்தும் பலவுமாகிய உயிரின் தத்துவ சரித்திரத்தை விளக்கிக்காட்டுகின்றன. ஆறுமதங்களையும் நம்மவர்கள் வகுத்த முறையினாலே, அவைகளின்காலம் ஒன்றின்பின் ஒன்றானது எனச் சிலர் மருள்கிறார்கள். நாம் நம்வயதைக்கணக்கிடுவதுபோலல்லாமல், மாறாகக்கணக்கிடுவோமானால், முன்கூறப்பட்ட மதங்கள் பழையனவாம். அறிவு முதிர்ச்சி விருத்தாப்பியமன்று. அது என்றும் இளமையுடைத்து. உண்மை விருத்தாப்பியதிசையையே இரண்டாவது பால்யமென்று சொல்வது. சாருவாகன் என்று சொல்லப்பட்ட லோகாயதன் பெருந்திண்டியும் சுவேச்சையும் கொண்ட பாலனவன்; பௌத்தன் நற்சிந்தையும் நற்குணமும் பொருந்தியவாலிபனவன். உலகத்துன்பங்களும் மாயைகளும் அவனைச் சூழ்ந்துவருத்த, அதற்குட்பட்டு அமிழ்வானோ; அல்லது, மீண்டும் நற்குண நற்செய்கை கெடாது புருஷனாவானோ; அதைப்பின்னன்றோபார்க்க

வேணும். பாவச்செய்கைகளின்பலமும் அதன்பிடிப்பும் அறியாத இளம்பருவத்திலே, நான் மெய்யும் ஒழுக்கமுங்குன்றேனென அறியாமல் உறுதிகூறினன். ஆயின் அவ்விளம்பருவத்திலேயே, நல்ல விதைகளை விதைத்து நல்லபூமியில் வேரூன்றச்செய்யாவிடில் அவன் உறுதியெல்லாம் வீணுகும். மேல், பௌத்தரின் குணதிவிஷயங்களைப்பற்றி பேசப்புகவும் அவருடைய பரிசுத்த சரணங்களில் நம் எளிய வந்தனத்தைச் செலுத்தப்பெறுவோமாகவும். அவருடைய பரிசுத்தத்தையும் பரோபகாரத்தையும் பெருந்தன்மையையும் நோக்க நமக்கு உண்டாகும் வணக்கமோ அளவின்று. அவர் இந்தியர், இந்தியர்களிலும் இந்தியர், என்பதை யாரும் மறந்துவிடுகிறார்கள். டாக்டர் ரைஸ்டேவிட்ஸ் பண்டிதர், அவர் இந்தியர்கள் யாவர்களினும் மேம்பட்ட மேன்மையையும் ஞானத்தையும் உத்தமகுணத்தையும் பொருந்தியவரென்று புகல்கின்றார். அவர்காலத்திலேயே ராஜராஜாக்களினுலும் மற்றவர்களினுலும் அவர் கனப்படுத்தப்பட்டார். அவர்கள் அவர் என்ன மதத்தைப் பிரசங்கித்தாரென்று கவனிக்கவில்லை. அவருடைய செய்கையும் குணமும் பரிசுத்தமாயிருந்ததே போதுமானதாயிற்று. நிரீசுவரசாங்கிய பிரவர்த்தகராகிய கபிலமுனிவரை முனிசிரேஷ்டராக ஸ்ரீகிருஷ்ணர் கீதையில் அங்கீகரித்தார். அது அவர் மதத்தை அங்கீகரித்ததினுலோ ? அன்று. அநேகமாக அவர் மதத்தைக் கண்டிக்கப்பிரயாசைப்பட்டிருக்கிறார். சைமினிமுனிவர் கொடியநாஸ்திகர். இருந்தும், அவர் பெரிய மகாரிஷியாகக்கொள்ளப்பட்டார். இன்னும் நம்மவர்களில் இத்தன்மைய குணநிசயம் காணக்கூடும். அவன் மகம்மதியனே, கிரிஸ்தவனே, அவன் ஞானநிலையில் நிற்பானுனல் அவனை எல்லாருஞ்சூழ்ந்து வணங்குவார்கள். இதனுலல்லவோ களவாளிகள் காஷாயத்தையும் சாம்பலையும் அணிந்து சாம்பலில் இருந்து ஒரு எழுத்து வாசனையும் தெரியாது மௌனம் சாதித்து மோசஞ்செய்வதற்கு இடமாகிறது. ஆகையால் பௌத்தரும் ஒருவிததர்மத்தை விளக்கவந்த பரமரிஷி யென்று கொண்டாடப்பட்டது ஆச்சரியமன்று. ஆகவும், திரிபுர அசுரர்களைத் திருப்பவேண்டி விஷ்ணுபகவானே பௌத்தராக அவதரித்தாரெனவும் கூறப்பட்டது. எப்படிகிரிஸ்துநாதர் காலத்தில் அவர் யூதர்களில் ஒன்றனவ்ரன்றி வேருகக்கொள்ளப்படவில்லை

யோ அப்படியே பௌத்தர்காலத்திலும் அவர் ஹிந்துக்களினின்றும் வேறுபட்டவரென்று தாமும் மற்றவர்களும் எண்ணவில்லை. அவரு க்குப் பின்காலத்திலும் அநேகசங்கங்கள் கூடிய பின்னருமே பௌ த்தம் வேறுமதமாக மாறுபட்டது. புத்தருக்கோ ஏது உடுத்து ஏதமது செய்திடினும் குற்றமில்லை. ஆசையைக்களைந்து, வேண்டு தல் வேண்டாமையற்று, இருவினை யொப்படைய வேண்டுவதே முக் கியம். அடைந்தபின் பெறும் பேறு ஏதேனும் உண்டோவென்று விசாரிக்கவும் வேண்டுவதில்லை. ஆயின் இந்த ஆழவெடுக்காத அழகிய சிற்றிலைக்கட்டியவர் பின்வரும் விளைவை கவனிக்கவில்லை. என்று ம ழியாச்சுடர்பொற் குன்றின்பேரில் கட்டப்படாததும் அதனால் பெ றும் பேற்றையும் எதிர்நோக்காததுமாகிய எந்தமதமும் நிலையுள்ள தாயிருக்குமோ? எப்படி முடிந்தது: அருமையாக வளர்க்கப்பெற்ற சாதுசங்கங்களில் அவர் காலத்திலேயே கலகம் விளைந்து, ஊண், உடை, காலம், இடம் முதலியவைகளைப்பற்றி தர்க்கித்து ஒருவரை யொருவர் பாஷண்டிகளென்றும், மாரன் ஏவலாளர்களும் நிந்தித்து தூஷித்தும் வந்தார்கள். பூசாரிகளையும் அவர்கள் ஆசாரங்களையும் புத்தர் எவ்வளவோ இகழ்ந்திருந்தும், கூடிய சீக்கிரத்தில் மிகவும் கட்டுப்பாடுகள் அமைந்து ஆசாரங்களுடன் ஆசாரியர்களையும், ஏனைய மதங்களில்லாத அநேக கீழ்மேல் உலகங்களையும் தேவர்களை யும் ஏற்படுத்திக்கொண்டார்கள். கடைசியில் அந்த மதம் அதிகம் கெட்டுப்போனபடியால் பிறந்த விடத்தினின்றும் வேருடன் பிடுங்கி எறிய நேரிட்டது. "புத்தமதம் அதிகம்கெட்டது அசோகர்காலத்து க்குப்பின்னரே. அதுவரை இந்தமதத்தை நிர்ப்பந்தம் செய்யக்கேட் டிலோம்." என்று ரைஸ் டேவிட்ஸ்பண்டிதர் சொல்லுகிறார். இவ் வித நிர்ப்பந்தங்கள் ஏற்படவில்லையென்று சொல்லவரவில்லை. ஆனால் இது ஐரோப்பிய கண்டங்களில் நாம் கேட்டிருக்கும் போல்வதொன் றென்று நாம்நினைக்கக்கூடாது. அது மிகவும்கொடூரமற்றது. குடிகள் கட்டன்றி ராஜாங்கதண்டனையன்று. இக்காலத்தைவிட அக்காலத்து ஒரு மதத்தினின்றும் மற்றொரு மதம் திரும்புவது மிகவும் எளிது. பெரிய புராண சரிதங்களினால் புத்தர்களும் நம்மவர்களும் முக்கியம் அரசனைத் தங்கள் பக்கம் திருப்பச்செய்ய முயற்சித்ததாகத் தெரிய வருகிறது. இவ்விதம் திருப்பியபின் குடிகளெல்லாம் அவ்விதமாயி

ஞராகச் சொல்லப்படுகிறது. அக்குடிகளின் திருத்தம் இருவகையிலும் நாமகார்த்தமாத்தான் தோற்றுகிறது. மடங்களில் இருக்கக்கூடிய சந்நியாசிகளைத்தவிர பெரும்பாலும் குடிகள் புத்தமதஸ்தர்களாகவில்லையென்பதே நமது துணிவு: அரசன் புத்தனுனல் யாவரும் புத்தர்களானதாகப்பாவனை. இதன்மாதிரிதான் அசோகர்காலத்தில் இந்தியாமுழுதும் புத்தமதம் பரவியதெனச் சொல்வது. எனினும் கடைசியில் மதமாற்சரியம் உண்டாகியது. அது தென்னிந்தியாவில் கி. பி. முதலாவது நூற்றுண்டு முதல் ஏற்பட்டதாகவும் சாட்சியங்களிருக்கின்றன. ஐரோப்பிய வித்வான்களுக்கு அதுவிஷயம் தெரிந்தவையல்ல. அக்காலம் தென்னிந்தியாவில் பிரபலமான அரசர்களிருந்து வடக்கிலும் தெற்கிலும் அவர்கள் ஆளுகையை விசாரித்து வந்ததாகத் தெரிகிறது. சாசனங்களினுல், பம்பாய் ராஜதானியிலுள்ள வாதாபி (இப்பொழுது—பாதாமி) என்ற பட்டணத்தை தென்னிந்தியர்கள் பிடித்ததாகக் காணப்படுகிறது. (அந்தச் சண்டையில் சேனைத்தலைவராகப்போயிருந்தவர் சிறுத்தொண்டர்.) இலங்கையை ஒரு முறைக்குமேலாகப்பிடித்ததாகவும் தெரிகிறது. புத்தமதமும் இலங்கையினின்றும் தென்னிந்தியாவுக்கு வந்ததாகத்தெரிகிறது. ஸ்ரீமான் மாணிக்கவாசகர் காலம் கி. பி. முதல்நூற்றுண்டாகக் கொள்ளின் அவர்காலத்திலேயே இவ்வித மதப்போர் விளைந்ததாகின்றது: இலங்கையரசன் ஊமைப் பெண்ணைப் பேசுவித்துநம்மவர்கள் செயமடைந்தார்கள். திருவாதவூர்ப் புராணத்தில் இச்சரிதம் விஸ்தாரமாகக் காணப்படுகிறது.

இப்பவும் சிங்களர்களுக்குள் ஊமைப்பெண்ணைப்பேசுவித்த ஐதீகம் நன்றாய்த்தெரிந்ததாகக் காணப்படுகிறது. பிறகு ஜைன மதம் வளர்ந்து ஓங்கினதாகத்தெரிகிறது. அப்பமூர்த்திகளும் சைனராயிருந்தகாலத்தில் தர்மசேனரென்ற பட்டம் வகித்து, சைவத்தில் திருப்பியபின் சைனர்களால் ஏவப்பட்ட பாடலிபுரத்து அரசனுல் துன்புறுத்தப்பட்டதாகவும் தெரிகிறது: அவர்காலத்தியவர், சிறந்துவிளங்கிய ஸ்ரீஞானசம்பந்தராகவும் அவர்செய்த அற்புதங்களால் கூன்பாண்டியன் திருந்தினவனுகி, புத்தமதம் வேருடன் அறுபட்டதாக வெளியாகின்றது. இது கி - பி - 6-ம் நூற்றுண்டின்

முதலில் நடந்தது. இக்காலவரையறை ஏற்படுத்திய பண்டிதர் சுந்தரம்பிள்ளையவர்களாலும் வெங்கய்யர் அவர்களாலும் காட்டிய ஏதுக்களுடன், சீனர்களுக்குள் விளங்கும் சரித்திரமுறைப்படி ஏற்படும் தென்னிந்தியாவில் அநேககாலம் உண்டிருந்த போதிதர்மன் என்பவன், கி. பி. 526 ஆண்டு பிராமணர்கள் செய்த துன்பம் பொருது சீனதேசம் போயினுன் என்ற சங்கதியும் ஓர் ஏதுவாகும். போதிதர்மனும் புத்தமதத்தைவிட சைனமதத்திலேயே பிரவர்த்தித்தவனுகவும் இதனினும் பகுக்கப்பட்ட ஓர்வித மதத்தையே சீனர்களுக்குப் போதித்தான் என்றும் காணப்படுகின்றது. இத்துடன் சைனமும் புத்தமும் தலையெடுக்காமற் போயிற்ருயினும் பின்னும் தங்கியிருந்தவர்களை நம்மவர்கள் துன்புறுத்தாதிருப்பதுடன் நம்மரசர்களும் பிற்காலத்தில் அவர்களுக்கு நன்கொடை கொடுத்து ஆதரித்துவந்தார்களெனவும் காணப்படுகிறது. ஸ்ரீசங்கரரும், ஸ்ரீராமானுஜரும் பௌத்தமதத்தை முற்றிலும் ஓட்டினதாகக்கூறும் கூற்று உண்மையாகக் காணப்படவில்லை. அவைகள் சாஸ்திர சாம்பிரதாய வாதக்கூற்ருகுமேயொழிய வேறன்று. ஆயினும் ஸ்ரீசங்கரர் சம்பந்தப்பட்டவரையில், வடஇந்தியாவிலுள்ள சில புத்த மடங்களை யொழித்து அம்மாதிரியான தம்மடங்களை ஸ்தாபித்திருக்கலாமென யூகிக்கவிடமுண்டாகின்றது: ஸ்ரீசங்கரர் காலத்துக்குமுன் புத்த ஜைன மடங்களைத்தவிர மற்ற மடங்கள் இருந்ததாக வெளியாகவில்லை.

புத்தமதத்தில்கூறலாயின அறத்தைப்பற்றி சிறந்தோர் பலராலும் நன்கு புகழப்பட்டிருக்கிறது. மாக்ஸ்மூலர் பண்டிதரும், புத்தர் கூறிய அறம் உலகினர் அறிந்த யாவற்றிலும் நிறைந்து சிறந்ததெனக்கூறினர். எனினும் இவ்வறத்தைச்சீனர்களுக்குள் விளங்கும் கன்பூசியன் மதத்தோடு ஒப்பிடில் மிகவும் தோற்றதாகக் காணப்படுகின்றது. அதன் (புத்தமதத்தின்)நிதானங்கள் பலங்குறைந்துள்ளது. அநேகசாதியர்களை மேம்படுத்தியதாகவும் காணக்கூடவில்லை. பர்மாவில் அன்றி மற்ற சாதியர்களால் நன்மார்க்கத்திற் புகுத்தியதின்று. எட்கின்ஸ் பண்டிதர் சொல்வது 'சீனரில் என்ன நல்லொழுக்கம் இருக்கின்றதோ அது கன்பூசியன் மதபோதனையினுல் ஏற்பட்

டது'கர்னல் ஆல்காட் அவர்கள் எடுத்துக்காட்டிய கணக்கின்படியே, இந்துக்களிலும் சிங்களர்கள் தீயர்களென்றாகின்றது. இதன் உண்மை அத்தேயத்தை ஒரு முறைபோய்ப்பார்த்ததனுனே நன்குவிளங்கும். 'பர்மாவிலும் சனங்களை நல்லொழுக்கம் பெறச்செய்த புத்தமதத்தின் பலம் இந்துசின நாட்டிலிருக்கும் குறிஞ்சி நாடர்களிலும் இந்திய ஜாதியார் சிறந்தமையே காரணமாகவும் சொல்லலாம். இந்தியரின் கைத்தொழிற் றேர்ச்சியும் நாகரீகமுமே, புத்தமதம் சிறந்ததற்கு காரணமாகும்' என எட்கின்ஸ்பண்டிதர் பின்னும் வரைகின்றனர். 'புத்தமத தத்துவ உண்மைகளை அறிய*பர்மர்கள் இயலாதவர்கள். இவ்வறிவின் விசேஷமில்லாமல் புத்ததர்மத்தினுனே பர்மர்கள் பக்தியும் நல்லொழுக்கமும் கொண்டார்களெனின் அதற்குள தாகிய ருசுக்களைக்காண்கிலோம்'என, பிகான்டெட்பிஷப்புச்சொல்லுகின்றார். முடிவில் புத்தமும் இந்து மதத்தில் பிறந்த சிறுமதலையேயன்றி வேறோ? 'இந்து மதம் எவ்வளவுகெட்டதென்றும் நிர்ப்பந்தமுள்ளதென்றும் காட்டாது, இதன் எதிர்மறையே, புத்கமதம் சித்தாந்தப்படுத்துகின்றது. ஏனெனின்,புத்தமதத்தில் சிறந்தும் அழகியும் பொலிவதுமானவை உளதென யாரும் மறுக்கார்.' எனக்கூறுகிறார் ரைஸ்டேவிட்ஸ்பண்டிதர்.

புத்தநிர்வாணம்.

புத்தமத தத்துவவிஷயம், இந்நூலில் வேண்டுமட்டும் பூர்வபக்ஷம் பண்ணியிருத்தலின், அதனைப்பற்றி ஈண்டு விஸ்தரிக்கவேண்டியதின்று. ஆயினும், புத்தமதஸ்தரின் பெரும்பேறாகிய நிர்வாணத்தைப்பற்றி இரண்டொருமொழி கூறுவோம். பண்டிதர் பலரும் பலவாய் இதைப்பற்றிப் பகர்ந்திருக்கின்றனர். ஒருவரோடொருவர் மாறுபட்டு மாக்ஸ்மூலரும் ரைஸ் டேவிட்ஸ் பண்டிதர் இருவரும் நிர்வாணம் என்பது ஆன்மாவின் கேட்டை உணர்த்துவதின்று என்றும், பரமரகசியமான கர்ம விதிப்படி பிறப்புக்குக் காரணமாகிய உள்ளம் உணர்வின்கண்ணுள்ள கொடிய அவாவின்பற்றை யறக்

* Burmese.